# PayLater சேவையின் விதிமுறைகள்:

இறுதியாக திருத்தப்பட்ட தேதி: 1 நவம்பர் 2025

நடைமுறைப்படுத்திய தேதி: 21 நவம்பர் 2025

முக்கியமானது – இந்த விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும். இந்த விதிமுறைகள் PayLater சேவைகளைப் பயன்படுத்தும் விருப்பத்தேர்வைத் தேர்ந்தெடுத்துள்ள பயனர்கள் (கீழே வரையறுக்கப்பட்டபடி), PayLater போஸ்ட்பெய்டு மற்றும்/அல்லது PayLater தவணைமுறை சேவையை வழங்குகின்ற மூன்றாம் தரப்பு வழங்குநர்கள் (கீழே வரையறுக்கப்பட்டபடி) ஆகிய இருவருக்கும் பொருந்தும்.

PayLater சேவைகளைப் பயன்படுத்துவதன் வழி, நீங்கள் (ஒரு பயனராக அல்லது மூன்றாம் தரப்பு வழங்குநர்களாக) இங்கே (ஒட்டுமொத்தமாக, "**PayLater** விதிமுறைகள்" அல்லது "ஒப்பந்தம்") கூறப்பட்டுள்ளபடி சேவைப் பயன்பாட்டிற்கான விதிமுறைகளைப் படித்துப், புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. இங்கே கூறப்பட்டுள்ள PayLater விதிமுறைகள் உங்களுக்கும் GFin சர்வீஸ்ஸ் (S) பிரைவேட் லிட் ("நிறுவனம்") –க்கும் இடையில் ஏற்படுகிற சட்டப்பூர்வ ஒப்பந்தமாக கட்டமைக்கப்படுகிறது. இந்த நிறுவனம் GrabTaxi ஹோல்டிங் பிரைவேட் லிட் -இன் இசைவுபெற்ற நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் இந்த ஒப்பந்தத்தில் பங்கேற்கும் மூன்றாம் தரப்பு வழங்குநர்களும் பயனர்களும் முறையே அவர்களின் தேவைக்கேற்ப PayLater சேவைகளைப் பயன்படுத்தும்பொழுது வழங்குபவைகளில், முதன்மையாக சேவை வசதிகளை அவர்களுக்கு அளிக்கும் தொழில்நுட்பக் குழு நிறுவனம் ஆகும் (மேலும் GrabTaxi ஹோல்டிங் பிரைவேட் லிட். மற்றும் அவர்களின் துணை நிறுவனங்கள், இசைவு பெற்ற நிறுவனங்கள், இணை நிறுவனங்களும், இணைந்து கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களும் "**Grab குழுமம் மற்றும் இணை நிறுவனங்கள்**" "**Grab**" அல்லது "நாங்கள்" எனறு குறிப்பிடப்படும்). மேற்கூறப்பட்டவற்றுக்கு அப்பால் PayLater சேவை, நிறுவனத்தின் ஏதேனும் இசைவுபெற்ற நிறுவனத்தால் இந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப கடமைகளைச் செய்வதை உறுதிப்படுத்த முழுமையாகப் பொறுப்பேற்கப்படும்.

PayLater போஸ்ட்பெய்டுசேவை அல்லது PayLater தவணைச் சேவையை (பொதுவாக **PayLater** சேவைகள்) வழங்கும் அல்லது பயன்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது Grab-ஆல் வழங்கப்படுகிற Grab மொபைல் செயலியைப் (செயலி) பயன்படுத்துவதன் வழியாக அல்லது ஏதேனும் பிற பொருத்தமான தளம் அல்லது மின்னணுத் தகவல்பரிமாற்றம் (ஒட்டுமொத்தமாக **Grab** தளம்), அல்லது Grab வழங்குகின்ற இணைச் செயலிகளைப் பதிவிறக்குதல், நிறுவுதல் அல்லது பயன்படுத்தல் (மென்பொருள்) வழியாக இந்த **PayLater** சேவைகளின் விதிமுறைகள், காலக்கிரமமாக அவ்வப்போது அவற்றில் எதிர்காலத்தில் ஏற்படும் திருத்தங்கள், சேர்த்தல்கள் ஆகியவற்றுக்கு https://www.grab.com/sg/ தளத்தில் அல்லது Grab தளத்தின் வழியாக வெளியிடப்படுகிறபடி நீங்கள் வெளிப்படையாக ஏற்புமை தெரிவித்து ஒப்புக்கொண்டு அவற்றுக்குக் கட்டுப்படுகிறீர்கள்.

நீங்கள் தொடர்ந்து PayLater சேவைகளைப் பயன்படுத்துகின்றபொழுது, நீங்கள் மேற்கூறியவற்றை மதிப்பாய்வு செய்தாலும் அல்லது இல்லையென்றாலும் PayLater விதிமுறைகளை நீங்கள் ஏற்று ஒப்புக்கொண்டதாகவே கட்டமைக்கப்படும். மேலும் நீங்கள் கீழுள்ளவற்றுக்கும் உங்கள் பிரதிநிதித்துவத்தை நீங்களே வழங்கியதாக ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்கள் PayLater சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்குகிறபொழுது, PayLater சேவைகளின் விதிமுறை ஷரத்து 10 இன்படி சேவைகளைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்ளும் உங்கள் எண்ணத்தை நிறுவனத்திற்கு நீங்கள் அறிவிப்பு வழியாகத் தெரிவிக்கவேண்டும்.

இந்த PayLater சேவைகளின் நோக்கத்திற்காக, அதன் இடம்பொருளுக்கேற்ப தேவைப்படுபவை:

- "பயனர்" என்ற சொல் இங்கே PayLater விதிமுறைகளை ஒப்புக்கொண்டு PayLater சேவைகளைப் பயன்படுத்துகின்ற இயற்கையான அல்லது சட்டப்பூர்வ நபர் என்று பொருள்படும்;
- "மூன்றாம் தரப்புக் கட்டணம்" என்ற சொல் ஒரு பயனர் PayLater தவணைமுறை வழியாக பொருந்துகின்ற பொருளை வாங்கும் தேதியில் முதல் தவணையாகச் செலுத்துகின்ற தொகையின் பொருந்துகின்ற விழுக்காட்டின் அடிப்படையில் (நிறுவனத்தின் இசைவு நிறுவனமாகிய, GPay நெட்வொர்க் (S) பிரைவேட் லிட்

("**GPNS**") மற்றும்/அல்லது அவ்வப்போது மூன்றாம் தரப்பு வழங்குநருக்கு வசூலிக்கும் முகவராக நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள பிற இசைவு நிறுவனம்) மூன்றாம் தரப்பு வழங்குநர் வசூலிக்கின்ற கட்டணம் என்று பொருள்படும்.

- "நிர்வாகக் கட்டணம்" என்ற சொல் நிறுவனம் மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள வசூலிக்கின்ற இசைவு பெற்ற நிறுவனம், பயனர் தமது தவறிய PayLater போஸ்ட்பெய்டு பில்கள் மற்றும் /அல்லது PayLater தவணை பில்லகளைச் செலுத்தத் தவறியதால் எழுந்த Grab தளத்திற்குள் Grab தளத்தை மற்றும்/அல்லது PayLater சேவைகளைப் பயன்படுத்தக் கிடைக்கின்ற அணுக்கத்தை இடைநீக்கி அல்லது முடக்கி வைக்கப்பட்டுள்ளதை மீண்டும் செயல்படுத்துவதற்காக வசூலிக்கப்படுகின்ற நிர்வாகக் கட்டணத்தைக் குறிப்பிடுகிறது.
- "செயல்முறைக் கட்டணம்" என்ற சொல் நிறுவனம் மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள வசூலிக்கின்ற இசைவு பெற்ற நிறுவனம், பயனரிடமிருந்து PayLater சேவைகளை வழங்குவதற்காக வசூலிக்கின்ற செயல்முறைக் கட்டணத்தைக் குறிப்பிடுகிறது.
- "மூன்றாம் தரப்பு வழங்குநர்" என்ற சொல் பொருந்துகிறபடி ஒற்று பயனருக்குப் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை வழங்குவதற்காக PayLater போஸ்ட்பெய்டு அல்லது PayLater தவணை சேவை வழியாக வழங்கி பகரமாக பெறவேண்டிய வாங்குதல் ஒப்பந்தத்தில் மற்றும்/அல்லது பிற ஆவணங்களின் (பெறவேண்டிய வாங்குதல் ஒப்பந்தம்) வழியாக நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ள சார்பற்ற மூன்றாம் தரப்பு வழங்குநர் (ஒதுக்கீட்டாளர்) தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெறவேண்டியதற்காக மூன்றாம் தரப்பு வழங்குனர் பெறுகின்ற தொகையை வசூலித்துக் கொள்ள ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் என்ற பதத்தில் உள்ளடங்குபவர்கள், ஓட்டுனர்கள், விநியோகிக்கும் கூட்டாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு வர்த்தகர்கள் ஆகியோர் மட்டுமல்லாமல் பிறரும் உட்படுவர்.

நுகர்வோர் ஆலோசனை - நுகர்வோர் (பயனர்கள்) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (அதாவது இந்த பயன்பாட்டு விதிமுறைகள்) கவனமாக படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். PayLater சேவைகள், இப்போது வாங்க-பிறகு செலுத்தும் (BNPL) சேவைகள் மற்றும் நிறுவனம் மற்றும்/அல்லது அதன் துணை நிறுவனங்களால் உங்களுக்கு வழங்கப்படும் கடன், கிரெடிட் கார்டு அல்லது கட்டண அட்டை வசதியை உருவாக்காது. BNPL சேவைகள் சிங்கப்பூர் நாணய ஆணையத்தால் (MAS) கட்டுப்படுத்தப்படவில்லை. சிங்கப்பூர் பிஎன்பிஎல் நடத்தை விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி நிறுவனம் பிஎன்பிஎல் வழங்குநராகும், மேலும் பிஎன்பிஎல் நடத்தை விதிகளின் கீழ் அங்கீகாரம் பெறுவதற்கான செயல்பாட்டில் உள்ளது.

**1.** <u>பயனரின் **PayLater** கணக்கு</u>

1.1 ஒரு பயனாராக PayLater சேவைகளைப் பயன்படுத்துவதன் வழியாக, நீங்கள் இவற்றுக்கு ஏற்புமையும் ஒப்புதலும் அளிக்கிறீர்கள்:

(a) நீங்கள் குறைந்தது 18 வயதுடையவர்;

(b) நீங்கள் சட்டப்படி கட்டுப்படுத்துகின்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் தகைமையும் அதில் நுழைவதற்கு சட்டப்பூர்வத் தகுதியும் உடையவர்;

(c) நீங்கள் உங்களைப் பற்றிய உண்மையான, துல்லியமான, நடப்பிலுள்ள முழுமையான தகவலை நிறுவனம் வேண்டுகிறபடி வழங்க வேண்டும் மேலும் அவற்றில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இவற்றுள் உள்ளடங்கும் தகவல்கள் இவை மட்டுமென்பதில்லை; உங்கள் சம்பளம், நிதி நிலைமை, வருமான வரி, சட்டப்பூர்வமான கட்டாயப் பங்களிப்பு, அல்லது நிறுவனம் தீர்மானிக்கின்ற ஏதேனும் மாற்று தேதி அல்லது தகவல். உங்கள் நிதி நிலைமையில் முக்கியமான மாற்றம் ஏற்படும் நிகழ்வில், நீங்கள் பொருந்துகிறபடி அதை நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும்;

(d) நீங்கள் அதிகாரப்பூர்வமாக வைத்துள்ள தகுதியுள்ள கிரெடிட் அட்டை(கள்) டெபிட் அட்டைகள் அல்லது நீங்கள் Grab தளத்தில் சேர்த்துள்ள பிற பணம்

செலுத்தும் முறைகள் ( “நிதியளிக்கும் வளம்” ) இவற்றுள் ஏதேனும் ஒன்றின் வழியாக PayLater பரிவர்த்தனைக்காகப் பணம் செலுத்தப் பயன்படுத்தப்படும்;

(e) நீங்கள் ஒரு PayLater கணக்கை மட்டுமே வைத்திருக்க முடியும். உங்கள் PayLater கண்க்கு உங்களுக்கு மட்டுமே ஆனது மேலும் அதை பிற தரப்புக்கு ஒதுக்கீடு செய்ய, மாற்ற அல்லது விற்க முடியாது; மேலும்

(f) உங்கள் PayLater கணக்கைப் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் வைத்துக் கொள்வது உங்கள் பொறுப்பாகும். உங்கள் PayLater கணக்கில் அங்கீகரிக்கப்படாத அணுகுதல் ஏற்படுகின்ற நிகழ்வில் அதை உடனடியாக நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும், அவ்வாறு செய்யாவிடில், உங்கள் கணக்கில் செய்யப்பட்டுள்ள அனைத்து வாங்குதல்கள் அல்லது பரிவர்த்தனைகளுக்கும் நீங்களே பணம் செலுத்துவதற்குப் பொறுப்பாளி ஆவீர்கள்.

1.2 ஒரு பயனராக நீங்கள் நிறுவனத்தை சோதனைகள் (கிரெடிட் சோதனைகள் உட்பட), மதிப்பைச் சரிபார்த்தல், இடர் மதிப்பீடு ஆகியவற்றை நடத்துவதற்கு அங்கீகாரம் அளிக்கிறீர்கள். மேலும் நேரடியாக அல்லது மூன்றாம் தரப்பு மூலமாக (கிரெடிட் அறிக்கையளிக்கும் முகமைகள் அல்லது கிரெடிட் பீரோ) , உங்கள் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கான தேவைப்படும் ஏதேனும் விசாரணைகள், PayLater சேவைகளின் கீழ் பணம் செலுத்தல்களை நடத்துவதற்கான உங்கள் தகுதி ஆகிவற்றை பொருந்தும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில் நடத்தை விதிகள் அல்லது தரநிலைகளின்படி மதிப்பீடுகளை நடத்துவதற்கு அங்கீகாரம் அளிக்கிறீர்கள். கூடுதலாக. உங்கள் தகவல்களை மூன்றாம் தரப்பு வழங்குநர்கள், இசைவு பெற்ற நிறுவனங்கள் மற்றும்/அல்லது இந்த PayLater சேவைகளை வழங்குவதற்குத் தேவையான பொருந்துகிற பிற மூன்றாம் தரப்புகளுடன் பகிர்ந்து கொள்வதற்கு நிறுவனத்திற்கு அங்கீகாரம் அளிக்கிறீர்கள்.

1.3 மேற்கொண்டு, ஒரு பயனராக நீங்கள் இவற்றுக்கு ஏற்புமையும் ஒப்புதலும் அளிக்கிறீர்கள்:

(a) நிறுவனத்தின் அகமுறை இடர் மதிப்பீடு, கூடவே பொருந்துகின்ற சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில் நடத்தை விதிகள் அல்லது தரநிலைகளின் அடிப்படையில் PayLater சேவைகளைப் பெறுவதற்கான உங்கள் தகுதியைத் தீர்மானித்தல் அல்லது அத்தகுதியை நீக்குதல் தொடர்பான விவகாரங்கள் முற்றிலும் நிறுவனத்தின் எதேச்சையான முடிவிற்குட்பட்டது.

(b) ஷரத்து 1 இல் குறிப்பிட்டுள்ளபடியான உங்கள் தகுதிநிலைக் கூறுகளைப் பூர்த்திசெய்தல் அல்லது தகுதி மற்றும் தகவல்களை வழங்குதலுக்கு அப்பால், நிறுவனம் பின்வருவனவற்றில் அதன் உரிமையையும் அதன் எதேச்சை அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்கிறது: (i) உங்களை PayLater கணக்கைத் தொடங்குவதற்கு மறுத்தல்; (ii) உங்கள் PayLater கணக்கை இடைநீக்குதல், திரும்பப்பெறுதல் அல்லது முடித்தல்; (iii) உங்கள் PayLater வரம்பைச் சீரமைத்தல் (iv) PayLater வழியாக நடத்திய ஏதேனும் பரிவர்த்தனையை அல்லது அதுபோன்ற பரிவர்த்தனைக்குச் செலுத்தப்பட்ட பணம் செலுத்தலை இரத்துசெய்தல் அல்லது சீரமைத்தல்; அல்லது (v) அவ்வப்போது நிறுவனத்தின் மதிப்பாய்வு அல்லது மதிப்பீட்டின் அடிப்படையில் தேவையானது எனக் கருதும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை; மற்றும்

(c) PayLater சேவையைப் பயன்படுத்துவதற்கான குறைந்தபட்சமாக செலவிடும் தொகையை அமைத்தல் (பொருந்தினால்) உட்பட, உங்கள் PayLater சேவைகளை அணுகுதல், பயன்படுத்தல் மற்றும்/அல்லது கூடுதல் கட்டுப்பாடுகளை காலக்கிரமப்படி அமைக்கும் உரிமையை நிறுவனம் வைத்துக் கொள்கிறது.

**2. PayLater** போஸ்ட்பெய்டு

**2.1 PayLater** போஸ்ட்பெய்டைப் பயன்படுத்தல்

2.1.1 நீங்கள் மூன்றாம் தரப்பு வழங்குநர் என்றால், நீங்கள் வழங்கும் பொருட்கள்/மற்றும் சேவைகளுக்காக உங்களுக்கும் பயனருக்கும் இடையில் நடக்கும் பணம் செலுத்தல் பரிவர்த்னையை நடத்த நீங்கள் PayLater போஸ்ட்பெய்டு சேவையை வழங்கலாம். இந்த வகையில் நீங்கள் இவற்றுக்கு ஒப்புக்கொள்ளுகிறீர்கள்:

(a) பயனருக்கு வட்டியில்லாத காலம் தாழ்த்திய பணம் செலுத்தலை வழங்குவதற்காக அதாவது பணம் செலுத்த வேண்டிய பரிவர்த்தனையை (டிப்கள் உட்பட) ஒற்றை காலம் தாழ்த்திய பணம் செலுத்தலாக அடுத்த மாதத்ததின் பணம் செலுத்தல் பரிவர்த்தனை தேதிக்குப் பின்னர் 7 ஆம் நாளில் செலுத்தல் (“**PayLater** போஸ்ட்பெய்டு பணம்செலுத்தல் காலக்கெடு”);

(b) உங்கள் பயனருக்கு பொருட்களை மற்றும்/அல்லது சேவைகளை விற்று அதற்கான அனைத்துப் பணம் செலுத்தல்களையும் டிப்கள் உட்பட (பொருந்துகிறபடி) பெறுதல் வாங்குதல் ஒப்பந்தத்தைத் தொடரும் விதத்தில், உங்களுக்கும் அந்த வாங்கிய தரப்புக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உங்கள் பெறுதல்களின் ஒதுக்கீட்டுக்கானபகரமாக பணம்செலுத்தலைப் பெறுவீர்கள்;

(c) GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள பிற இசைவு நிறுவனங்களை நீங்கள் ஏற்று உறுதிப்படுத்துக்கொண்டபடி அவர்கள் உங்களின் சேகரிப்பு முகவர்களாக நிர்வாகம் செய்து உங்களுக்குச் சேர வேண்டிய நிலுவையை பெறுதல் வாங்குதல் ஒப்பந்தப்படி நடந்து உங்கள் நீங்கள் செலுத்த வேண்டிய தொகைகளுக்காக உங்கள் விநியோகித்தல் முகவர்களாகவும் பயனர்களுக்கு அல்லது ஒதுக்கீட்டாளர்களுக்கு இந்த பெறுதல் வாங்குதல் ஓப்பந்தத்தின்படி பெறுதல் தொகைகளை விநியோகிப்பார்கள்; மேலும்

(d) நிறுவனம் தானாகவே அல்லது அதன் இசைவு பெற்ற நிறுவனங்களின் வழியாக இது போன்ற பணம்செலுத்தல்களை உங்களுக்குப் பயனரால் Grab தளம் வழியாக அல்லது மறுதலையாக நீங்கள் செலுத்தலாம் (பயனரின் பெயரும் பிற தொடர்பு விவரங்களும் உங்களுக்கு வழங்கப்படும்).

2.1.2 நீங்கள் பயனர் என்றால், கிடைக்கும்பொழுது, PayLater போஸ்ட்பெய்டு சேவையை Grab தளத்தில் தேர்வுசெய்து உங்களுக்கும் மூன்றாம் தரப்பு வழங்குனருக்கும் இடையில் Grab தளத்தில் நடைபெற்ற பணம் செலுத்தல் பரிவர்த்தனைக்காக தேர்ந்தெடுகக்கலாம்.

2.1.3 நீங்கள் பயனர் என்றால் நீங்கள் பெற்ற பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காக PayLater போஸ்ட்பெய்டு சேவை வழியாக, காலம் தாழ்த்தி செலுத்துவதைத் தேர்ந்தெடுக்கலாம், அதற்காக இவற்றை ஒப்புக்கொள்கிறீர்கள்.

(a) மூன்றாம் தரப்பு வழங்குநர் பணம் செலுத்தல்களையும் டிப்கள் உட்பட (பொருந்துகிறபடி) PayLater போஸ்ட்பெய்டு சேவை வழியாக, காலம் தாழ்த்தி வட்டியின்றி செலுத்தும் அடிப்படையில் உங்களுக்கு வழங்கும் பணம்செலுத்தலை மூன்றாம் தரப்புக்குச் செலுத்த வழங்குவார்;

(b) மூன்றாம் தரப்பு வழங்குநர் அது போன்ற உங்களிடமிருந்து பெற வேண்டிய பெறுதல்களை ஒதுக்கீட்டாளருக்கு விற்று ஒதுக்கீடு செய்வார். அது போன்ற ஒதுக்கீடுகளுக்கு ஒதுக்கீட்டாளருக்குச் செலுத்த வேண்டியவற்றுக்காக அறிவிக்கப்படுவீர்கள். இந்தப் பெறுதல்கள் நிமீனகள் மூன்றாம் தரப்பூ வழங்குநருடன் PayLater சேவைகளின் கீழ் நீங்கள் செய்துகொண்ட பணம் செலுத்தல் விதிமுறைகளின் கீழ் இருக்குமென்பதை ஒப்புக்கொள்கிறீர்கள் ;

(c) உங்கள் பெயர் மற்றும் தொடர்புத் தகவல்கள் உட்பட இவை மட்டுமென்ற வரம்பின்றி, நிறுவனம் இவற்றைமூன்றாம் தரப்பு வழங்குநருக்கு வழங்குவதற்கு ஒப்புக்கிறீர்கள். இது உங்களால் செலுத்தப்பட்ட வேண்டிய பணம் செலுத்தல்களை மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளர் பெறுவதற்கு வசதிசெய்வதற்காகும்; மேலும்

(d) இந்த PayLater போஸ்ட்பெய்டு சேவையின் கீழ் (மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு) PayLater போஸ்ட்பெய்டு கால்க்கெடுவிற்குள்

செலுத்துவது தோல்வியடைந்தால், மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளர் மற்றும்/அல்லது அவர்களின் சார்பாக (நிறுவனம் உட்பட) செயற்படும் நபர் உங்களிடமிருந்து பணம் செலுத்தலைப் பெறுவதற்கான தேவையான நடபடிகளை எடுப்பதற்கு ஒப்புக் கொள்கிறீர்கள்.

2.1.4 நீங்கள் ஒரு பயனர் அல்லது மூன்றாம் தரப்பு வழங்குநராக PayLater விதிமுறைகளை மீறுவதாக ஒரு பணம் செலுத்தலைச் செலுத்தும்போது அந்தப் பணம் செலுத்தல் மோசடியாக, சட்டவிரோதமாக அல்லது ஏதேனும் குற்றவியல் செயல்களில் ஈடுபடுவதாக இருப்பதாக நிறுவனம் நியாயமாகச் சந்தேகம் கொள்வதற்கு இடமிருந்தால், அதன் செயல்முறைப்படுத்தலை இடைநிறுத்துவதற்கு அல்லது பின்னர் மறுதலிக்கும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொள்கிறது. இதைப் போன்ற நிகழ்வில், நீங்கள் செலுத்திய பணத்திற்காக நீங்கள் நிறுவனத்தை இந்த விதமான பிடித்து வைத்தல், காலதாமதம், இடைநிறுத்தல் அல்லது இரத்துசெய்தல் ஆகியற்றுக்குப் பொறுப்பாளி ஆக்க முடியாது.

**2.2 PayLater** போஸ்ட்பெய்டுக்கான பணம் செலுத்தல் செயற்பாடு

2.2.1 மூன்றாம் தரப்பு வழ்ங்குநர் மற்றும்/அல்லது ஒதுக்கீட்டாளர் சார்பாக நிறுவனம் பயனருக்கு ஒரு ஒட்டுமொத்த பணம் செலுத்தல் அறிக்கையை அல்லது பில்லை ஒவ்வொரு PayLater போஸ்ட்பெய்டு பணம் செலுத்தல் காலக்கெடு(களுக்கு) (“**PayLater** போஸ்ட்பெய்டு பில்**(கள்**“)) முன்னர் வழங்கும் .

2.2.2 PayLater போஸ்ட்பெய்டு பில்(கள்) மற்றும்/அல்லது தொடர்புள்ள கட்டணங்களைச் செலுத்துவதற்கான முதன்மையான பணம்செலுத்தல் முறையாக GrabPay கிரெடிட்ஸ் (GrabPay பயன்பாட்டு விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டபடி இருக்கிறது. Grab தளத்தில் பயனர் சேர்த்துள்ள நிதி வளமானது, பயனரின் PayLaterகணக்குடன் இணைக்கப்படும். பயனர் Grab தளத்தில் எந்த நிதி வளத்தையும் சேர்க்கவில்லை என்றால் PayLater சேவைகளைப் பயன்படுத்த ஒரு நிதி வளத்தைச் சேர்ப்பதற்குக் கேட்டுக்கொள்ளப்படுவார். இந்த நிதி வளம் GrabPay கிரெடிட்களை வாங்கவும் அதன் வழியாக PayLater போஸ்ட்பெய்டு பில்(களைச்) செலுத்தும் பொருட்டும் மற்றும் அல்லது தொடர்புள்ள பிற கட்டணங்களைச் செலுத்தவும் பயன்படுத்தப்படும். GrabPay பயன்பாட்டு விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டவை இதற்குப் பொருந்தும்.

2.2.3 பொருந்தினால், நிறுவனம் Grab தளத்தில் கிடைக்கச் செய்துள்ள பிற பணம் செலுத்தல் முறைகளையும் PayLater போஸ்ட்பெய்டு பில்(களைச்) செலுத்துவதற்குப் பயனர்கள் தேர்வு செய்யலாம்..

2.2.4 PayLater போஸ்ட்பெய்டு தவிர பிற பணம் செலுத்தல் முறைகளைப் பயன்படுத்துவதற்காக மூன்றாம் தரப்பு அல்லது நிறுவனம் எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை. இது PayLater விதிமுறைகளில் பயனருடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

2.2.5 தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் சிறப்பம்சங்கள் :

(a) தானியங்கி-பிடித்தம்: இதன்படி, பயனர் GPNS-ஐ செயற்படுத்தி மூன்றாம் தரப்புக்கு அல்லது ஒதுக்கீட்டாளருக்கு மற்றும்/அல்லது அவர்களின் சார்பில் செயற்படும் (நிறுவனம் உட்பட) ஏதேனும் நபருக்கு PayLater போஸ்ட்பெய்டு பில்களின் கீழ் செலுத்த வேண்டிய தொகைகளை பயனரின் GrabPay கிரெடிட்ஸ்-இலிருந்து PayLater போஸ்ட்பெய்டு பணம் செலுத்தல் காலக்கெடுவிற்குள் மேற்கொண்டு பயனரிடமிருந்து ஒப்புதல் கேட்கப்படாமலே தானியங்கி பிடித்தம் செய்துகொள்ளப்பட ஒப்புக்கொள்கிறார். பயனர் தனது விருப்பத்திற்குரிய நிதி வளத்தைச் Grab தளத்தில் சேர்த்து அதை இயல்புநிலை பணம் செலுத்தும் முறையாக ஆக்கி GPNS அதிலிருந்து தானியங்கி, பணத்தைப் பிடித்துக்கொள்ள வகை செய்யலாம்.

(b) தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் சிறப்பம்சம்: PayLater போஸ்ட்பெய்டு பில்களை PayLater போஸ்ட்பெய்டு பணம் செலுத்தல் காலக்கெடுவிற்கு முன் செலுத்தப் போதுமான GrabPay கிரெடிட்ஸ் இல்லாமல் பற்றாக்குறையாக இருந்தால் பயனரின் விருபத்திற்குரிய நிதி

வளத்திலிருந்து தானாகவே போதியளவு GrabPay கிரெடிட்ஸ்- ஐ. PayLater போஸ்ட்பெய்டு பில்களை மற்றும் அல்லது தொடர்புள்ள கட்டணங்களைச் செலுத்தும் ஒரே நோக்கத்திற்காக GPNSஐ செயற்படுத்த இங்கு பயனர் ஒப்புதல் வழங்குகிறார்.

2.2.6 சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டு, எந்தக் காரணத்திற்காவது GPNS, PayLater போஸ்ட்பெய்டு பில்களை PayLater போஸ்ட்பெய்டு பணம் செலுத்தல் காலக்கெடுவிற்கு முன் செலுத்துவதற்குப் போதுமான பணம் இல்லாமல் இருந்தால் ஷரத்து 2.2.5 (a)-இன்படி இந்தத் தானியங்கி பிடித்தம் செய்வதை மாற்ற முடியாதபடி செயற்படுத்தி தொடர்ந்து பிடித்தம் செய்யப்படும் அல்லது ஷரத்து 2.2.5 (b)-இன்படி தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் செய்யப்பட்டு பயனரின் விருப்பத்திற்குரிய நிதி வளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் அல்லது அது தோல்வியடைந்தால், Grab தளத்திலுள்ள பயனரின் வேறு ஏதேனும் பிற நிதி வளத்திலிருந்து முழுப் பணம் செலுத்தலும் பெறப்படும்.

2.2.7 பயனர் GrabPay வாலட் வழியாக ஒரு காலண்டர் ஆண்டின் மொத்த மதிப்பை அடைந்துவிட்டால், (GrabPay பயன்பாட்டு விதிமுறைகளில் விவரிக்கப்பட்டபடி) அல்லது GrabPay கிரெடிட்ஸ் வழியாக PayLater போஸ்ட்பெய்டு பில்கள் மற்றும்/அல்லது தொடர்புடைய கட்டணங்கள் பயனரை அம்மதிப்பை அடையச் செய்துவிட்டால், பயனர் GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள பிற இசைவு நிறுவனங்களை பயனரின் நிதி வளத்திலிருந்து நேரடியாகப் பணத்தைப் பிடித்தம் செய்து பயனரின் PayLater போஸ்ட்பெய்டு பில்(களை) மற்றும்/அல்லது ஏதேனும் தொடர்புடைய கட்டணங்களைச் செலுத்துவதற்காக ஒப்புக்கொண்டு அங்கீகரிக்கிறார்.

2.2.8 இந்த PayLater பயன்பாட்டு விதிகளில் குறிப்பிட்டவற்றை ஒப்புக்கொண்டபடி PayLater போஸ்ட்பெய்டு பில்(களுக்கு) PayLater போஸ்ட்பெய்டு காலக்கெடு தேதிக்குள் முழுப் பணம் செலுத்தலும் செய்யப்படாவிட்டால் (பயனரால் நேரடியாகவோ தானியங்கி டாப் அப் அல்லது தானியங்கி பிடித்தம் செய்யும் அம்சம் வழியாகவோ அல்லது மேற்கூறிய நேரடியான பிடித்தம் தோல்வியடைந்தாலோ) ( மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு), அந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளர் மற்றும்/அல்லது அவர்களின் சார்பில் செயற்படும் எந்த நபரும் (நிறுவனம் மற்றும்/அல்லது இசைவு பெற்ற நிறுவனங்கள் உட்பட)பயனர் பணம் செலுத்துமாறு தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்க, பயனரின் Grab தளத்திற்கான மற்றும்/அல்லது PayLater சேவைகள் மற்றும்/அல்லது PayLater போஸ்ட்பெய்டு சேவையை அணுகுவதற்கான அணுக்கத்தை இடைநிறுத்தி வைத்தல் செய்யப்படும்.

2.2.9 இவ்வாறு இடைநிறுத்தல் செய்யப்படும் நிகழ்வில், பயனரின் அணுக்கத்தை மீண்டும் செயற்படுத்தவும், Grab தளத்திற்குள் மற்றும்/அல்லது PayLater சேவைகளை அணுக SGD15 நிர்வாகக் கட்டணமாக பயனரிடமிருந்து வசூலிக்கப்படும் .

2.2.10 நிர்வாகக் கட்டணத்தைச் சேமிக்கவும், PayLater போஸ்ட்பெய்டுக்கு வேறு எந்த வட்டியும் அல்லது கட்டணமும் வசூலிக்க மாட்டோம், மேலும் உங்களிடம் வசூலிக்கப்படும் நிர்வாகக் கட்டணத்தை நாங்கள் கூட்ட மாட்டோம்.

**2.3 PayLater** போஸ்ட்பெய்டு ரீஃபண்ட் செயல்முறை

2.3.1 பயனர் PayLater போஸ்ட்பெய்டு பில்லை பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காகச் செலுத்திய பின்னர் ரீஃபண்ட் பெறுதல்:ஒரு பயனராக நீங்கள் முழு அல்லது பகுதி ரீஃபண்ட்-ஐ மூன்றாம் தரப்பு வழங்குநர் இடமிருந்து பெற்ற பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காக PayLater சேவைகளின் வழியாக பெறவேண்டிய நிகழ்வில், ஆனால் நீங்கள் அந்தப் பொருட்கள் PayLater போஸ்ட்பெய்டு பில்லின் கீழ் வருகையில், நீங்கள் இவற்றுக்கு ஏற்புமையும் ஒப்புதலும் வழங்குகிறீர்கள்:

(a) அந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள இசைவு பெற்ற நிறுவனங்களுக்கு, அவை மூன்றாம் தரப்பு வழங்குநரின் பணம் விநியோகிக்கும் முகவராக, இது போன்ற உங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரீஃபண்ட் தொகைகளுக்காகச் செயற்படுவார்கள் ;

(b) GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள இசைவு பெற்ற நிறுவனங்கள் இது போன்ற ரீ:பண்ட் பெறப்படும் நிகழ்வில் உங்கள் சார்பாக PayLater போஸ்ட்பெய்டு பில்(களை) மற்றும்/அல்லது தொடர்புள்ள நிலுவையாக உள்ள கட்டணங்களுக்காக அல்லது PayLater போஸ்ட்பெய்டுசேவையைப் பயன்படுத்தி நடத்தப்படும் எதிர்காலப் பரிவர்த்தனைகளுக்காகச் செலுத்தப்படுவதும் நிகழும். PayLater போஸ்ட்பெய்டு பில்(களை) மற்றும்/அல்லது தொடர்புள்ள கட்டணங்களுக்காகச் செலுத்தப்படாத ஏதேனும் ரீ:பண்ட் தொகைகள் GrabPay கிரெடிட்களாக மற்றும்/அல்லது உங்கள் நிதி வளங்களுக்கு ரீ:பண்ட் செய்யப்படும். மேலும் ஷரத்து 2.2.7 இன்படி நேரடி பிடித்தம் நிகழ்ந்தால் அது முதலில் GrabPay கிரெடிட்ஸ் இல் சேர்ந்துள்ள அதுபோன்ற ரீ:பண்ட் மீது செயற்படும்.

(c) ஒரு பயனராக நீங்கள் இந்த ஒப்பந்தத்தை ஷரத்து 10.1 இன்படி முடித்துக்கொண்டால், ஷரத்து 2.2.7 இன்படி நேரடி பிடித்தம் நிகழ்ந்தால், PayLater போஸ்ட்பெய்டு பில்(களுக்குச்) செலுத்தப்படாத ஏதேனும் ரீ:பண்ட் உங்களுக்கு GrabPay கிரெடிட்ஸ் மற்றும்/அல்லது உங்கள் நிதி வளத்தில் ரீ:பண்ட் செய்யப்படும்,

**3. <u>PayLater தவணைகள்</u>**

**3.1 <u>PayLater தவணைகளைப் பயன்படுத்தல்</u>**

3.1.1 நீங்கள் மூன்றாம் தரப்பு வழங்குநர் என்றால், நீங்கள் பெறுதல் வாங்குதல் ஒப்பந்தத்தைத் தொடரும் விதத்தில், <u>PayLater தவணைகள்</u> சேவையைப் பயனருக்கும் உங்களுக்கும் இடையிலான நீங்கள் வழங்கிய பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்கான பணம் செலுத்தல்களுக்காகப் பெறலாம். இதைப் பொருத்தளவில், நீங்கள் இவற்றுக்கு ஒப்புதல் அளிக்கிறீர்கள்:

(a) பயனர் உங்களுக்கு செலுத்த வேண்டிய செலுத்தல் பரிவர்த்தனை (பொருந்தும் டிப்கள் உட்பட) அவருக்குக் கடமையாக உள்ள பயனர் தாமதித்த பணம்செலுத்தலை இந்த வழியில் செலுத்த வழங்குகிறீர்கள்: உங்களுக்கும் பயனருக்கும் அறிவிக்கப்பட்ட நிகழ்வெண் எண்ணிக்கையில் சமமான மாதாந்திர பணம் செலுத்தல்களாக Grab தளங்களின் வழியாகச் செலுத்தப்படலாம், இவற்றுக்குப் பொருந்தும்படியாக:

(i) முதலாம் தவணை பணம் செலுத்தல் பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து ஒரு மாதம் கழித்து வரும் தேதியில் செலுத்தப்பட்டு மீதமுள்ள தவணைகள் பணம் செலுத்தப்பட வேண்டிய பரிவர்த்தனைத் தேதியைத் தொடர்ந்து வரும் தேதிகளில் செலுத்தப்பட வேண்டும் ; அல்லது

(ii) முதலாம் தவணை பணம் செலுத்தல் வாங்குதல் நடந்த நேரத்தில் செலுத்தப்பட்டு மீதமுள்ள தவணைகள் பணம் செலுத்தப்பட வேண்டிய பரிவர்த்தனைத் தேதியைத் தொடர்ந்து வரும் தேதிகளில் செலுத்தப்பட வேண்டும் ; அல்லது

(iii) இந்தக் காலம் தாழ்த்திய பணம் செலுத்தல்களுக்கு விதிமுறைகளின் ஷரத்து 3.1.1(a)(i), (ii), அல்லது (iii) பயனருக்கு வழங்கப்படும் என்பது நிபந்தனையாக இருக்கும் பட்சத்தில், உங்களுக்கும் பயனருக்கும் அறிவிக்கப்பட்ட நிகழ்வெண் எண்ணிக்கையில் Grab தளத்தின் வழியாக தவனைத் திட்டங்(களின்)படி தவணைப் பணம் செலுத்தல்கள் செலுத்தப்படும், இது அவ்வப்போதுள்ளபடி நிறுவனத்தால் ஒப்புக்கொள்ளப்படும்,

( ஒட்டுமொத்தமாக, “**PayLater** தவணைகள் பணம்செலுத்தல் காலக்கெடுக்கள்**”);**

(b) உங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காக பயனருக்கு விற்ற மற்றும் ஒதுக்கீடு செய்யவேண்டிய பணம் செலுத்தல்கள் அனைத்தும் (மேற்கூறிய ஷரத்து 3.1.1(a)(ii) தவிர) டிப்கள் உட்பட (பொருந்துகிறபடி), நீங்களும் பயனரும் உங்களுக்கிடையில் ஒப்புக்கொண்டுள்ள பெறுதல் வாங்குதல் ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக

உங்கள் பெறுதல்களுக்கான ஒதுக்கீடுகளுக்கான பணம் செலுத்தல்களாகப் பெறுவீர்கள்;

(c) நீங்கள் GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ள பிற இசைவு பெற்ற நிறுவனங்கள், உங்கள் முகவராக உங்களுக்குச் செலுத்த வேண்டியவற்றைபெறுதல் வாங்குதல் ஒப்பந்தத்தின்படி நிர்வகிப்பார்கள் மேலும் (முதலாம் பணம் செலுத்தல் பயனர் வாங்கிய பொருத்தமான பொருலை வாங்கிய தேதியில் செலுத்தப்பட்டிருக்கும்) இவ்வாறாக வசூலித்து உங்களுக்குச் சேரவேண்டிய முதலாம் தவணையாக செலுத்தப்படும் (முதலாம் தவணை மீது மூன்றாம் தரப்பு கட்டணம் அல்லது வேறு எதேனும் முதலாம் தவணைக் கட்டணம் ஏதும் நிலுவையாக செலுத்தப்பட வேண்டியிருந்தால் அது கழித்துக்கொள்ளப்படும்) மேலும் பெறுதல் வாங்குதல் ஒப்பந்தத்தின்படி நீங்கள் பயனருக்குச் செலுத்த வேண்டியவற்றுக்கு உங்கள் விநியோகிக்கும் முகவர்களாகவும் செயல்படுவார்கள் என்பதற்கு ஏற்புமையும் உறுதிப்படுத்தலு அளிக்கிறீர்கள்;

(d) பயனர் உங்களுக்குச் செலுத்துகிற இதுபோன்ற பணம்செலுத்தல்கலை நிறுவனம் மற்றும்/அல்லது அதன் இசைவுபெற்ற நிறுவனங்கள் Grab தளம் அல்லது வேறு வழியாக ( பயனரின் பெயர் பெயர் மற்றும் தொடர்புத் தகவல்களை வழங்குவதின் வழியாக செலுத்தப்பட ஏதுவாக்குவார்கள்;

(e) முதலாம் தவணை பணம் செலுத்தல் செலுத்தப்படும் தேதியில், முதலாம் தவணை பணம் செலுத்தல் பொருள் வாங்கப்படும்போது செலுத்தப்படுகின்றவேளை, மூன்றாம் தரப்பு கட்டணம் உங்களிடமிருந்து GPNSக்கு மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள பிற இசைவு பெற்ற நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கும்.

3.1.2 நீங்கள் பயனர் என்றால், கிடைக்கும்போது நீங்கள் PayLater தவணை சேவையை Grab தளத்திற்குள் உங்களுக்கும் மூன்றாம் தரப்பு வழங்குநருக்கும் இடையில் நடந்து முடிந்த எந்தப் பணம் செலுத்தல் பரிவர்த்தனைக்காகவும் தேர்ந்தெடுக்கலாம்.

3.1.3 நீங்கள் பயனர் என்றால், நீங்கள் PayLater தவணை வழியாக உங்கள் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காக காலம் தாழ்த்திய பணம் செலுத்தலைத் தேர்ந்தெடுத்தால் நீங்கள் இவற்றுக்கு ஒப்புக் கொள்கிறீர்கள்:

(a) பொருந்துகிறபடி முதலாம் பணம் செலுத்தலை வாங்குகின்றபொழுது செலுத்திவிட்டு, சமமான கால இடைவெளியிலான தவணைகளாக PayLater தவணை காலக்கெடு செலுத்தல்களாக மூன்றாம் தரப்பு வழங்குநருக்கு பணம் செலுத்தல் பரிவர்த்தனையை (பொருந்துகிற டிப்கள் உட்பட) மூன்றாம் தரப்பு வழங்குநர் காலம் தாழ்த்திய பணம் செலுத்தல் விதிமுறைகளின் கீழ் வழங்குவார்;

(b) மூன்றாம் தரப்பு வழங்குநர் உங்களுக்கு விற்று இதுபோன்ற பெறுதல்களை உங்களிடமிருந்து ஒதுக்கீட்டாளர் பெற ஒதுக்கீடு செய்ய ஒப்புக் கொள்கிறீர்கள். இதுபோன்ற ஒதுக்கீடு PayLater தவணை விதிகளின் கீழ் அமைத்து மூன்றாம் தரப்பு அதே பணம் செலுத்தல் முறையில் நீங்கள் ஒதுக்கீட்டாளருக்கு செலுத்தும்படியாக உங்களுக்கு அறிவிப்பார் ;

(c) மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு உங்களிடமிருந்து பணம்செலுத்தலை ஏதுவாக்குவதற்காக , உங்கள் தனிநபர் தகவல்களான இவற்றோடு மட்டும் என்ற வரம்பில்லாதபடி உங்கள் பெயர், தொடபுத் தகவல் மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு வழங்கப்படுவதற்கு ஒப்புக் கொள்கிறீர்கள்; மேலும்

(d) PayLater தவணை சேவை வழி (மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு) by the PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடு தேதியில் பணம் செலுத்தத் தவறினால், மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளர் அல்லது அவர்களின் சார்பில் செயற்படும் (நிறுவனம் உட்பட) எந்த நபரையும் உங்களிடமிருந்து பணம் செலுத்தலை அமல்படுத்துவதற்குத் தேவையான நடபடிகளை எடுக்க ஒப்புக்கொள்கிறீர்கள்.

3.1.4 நீங்கள் பயனர் என்றால், PayLater தவணைக்காக பொருந்தினால் செயல்முறைக் கட்டணம் வசூலிக்கப்படுவதற்கு ஒப்புக் கொள்கிறீர்கள். இந்தச் செயல்முறைக் கட்டணம் முழு வாங்குதல் பரிவர்த்தனை தொகை மீது பரிந்துரைக்கப்பட்ட வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகைக்குச் சமமாக இருக்கும். இந்த பரிந்துரைக்கப்பட்ட வீதமானது, PayLater தவணையைச் செலுத்தும் காலம், நிறுவனம் மூன்றாம் தரப்பு மற்றும்/அல்லது பயனரை மதிப்பீடு செய்துள்ள நிலைமை அல்லது மூன்றாம் தரப்பு வழங்குநருடன் கொண்டுள்ள ஒப்பந்தம் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடும். ஆனால் இந்த பரிந்துரைக்கப்பட்ட வீதமானது Grab தளம் வழியாக இந்தப் பொருந்துகிற செயல்முறைக் கட்டணம் உங்களுக்கும் மூன்றாம் தரப்பு வழங்குநருக்கும் இடையில் நடக்கும் வாங்குதல் பரிவர்த்தனைக்கு முன்னரே உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்தச் செயல்முறைக் கட்டணம் ஒவ்வொரு தவணைக்கும் முன்னரோ, சரியான நேரத்தில் அல்லது காலம் தாழ்த்திய பணம் செலுத்தல் என்ற பாகுபாடின்றி PayLater தவணை பில்களைச் (கீழே வரையறுத்துள்ளபடி) நீங்கள் செலுத்தும் பொழுது வசூலிக்கப்படும். அவ்வப்போது இந்த செயல்முறைக் கட்டணத்தை திருத்தி அமைக்க நிறுவனம் மற்றும்/அல்லது இசைவுபெற்ற நிறுவனம் உரிமை பெற்றுள்ளது. இது உங்களுக்கு Grab தளம் வழியாக அறிவிக்கப்படும்.

3.1.5 ஒரு பணம் செலுத்தலைச் பணம் செலுத்தலைச் செயல்முறைப் படுத்தும்பொழுது அந்தப் பணம் செலுத்தல் மோசடியாக, சட்டவிரோதமாக அல்லது ஏதேனும் குற்றவியல் செயல்களில் ஈடுபடுவதாக இருப்பதாக நிறுவனம் நியாயமாகச் சந்தேகம் கொள்வதற்கு இடமிருந்தால், அதன் செயல்முறைப்படுத்தலை இடைநிறுத்துவதற்கு அல்லது பின்னர் மறுதலிக்கும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொள்கிறது. இதைப் போன்ற நிகழ்வில், நீங்கள் செலுத்திய பணத்திற்காக நீங்கள் நிறுவனத்தை இந்த விதமான பிடித்து வைத்தல், காலதாமதம், இடைநிறுத்தல் அல்லது இரத்துசெய்தல் ஆகியற்றுக்குப் பொறுப்பாளி ஆக்க முடியாது.

**3.2 PayLater** தவணைகளுக்கான பணம் செலுத்தல் செயல்முறை

3.2.1 மூன்றாம் தரப்பு வழ்ங்குநர் மற்றும்/அல்லது ஒதுக்கீட்டாளர் சார்பாக, நிறுவனம் பயனருக்கு ஒரு ஒட்டுமொத்த பணம் செலுத்தல் அறிக்கையை அல்லது பில்லை ஒவ்வொரு PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடு(களுக்கு) ("**PayLater** போஸ்ட்பெய்டு பில்**(**கள்")) முன்னர் வழங்கும் .

3.2.2 முதன்மையான PayLater தவணை பில்(களுக்கான) செலுத்தல் முறை, ஏதேனும் முதலாம் தவணையாக வாங்கும் நேரத்தில் (பொருந்தினால்) செலுத்தும் பணம் செலுத்தல், மற்றும்/அல்லது செயல்முறைக் கட்டணம் உட்பட தொடர்புள்ள கட்டணங்கள் GrabPay கிரெடிட்ஸ் வழியாக (GrabPay பயன்பாட்டு விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி) செலுத்தப்படுபவையாக இருக்கும். Grab தளத்தில் உள்ள பயனரின் நிதி வளங்கள் பயனரின் PayLater கணக்குடன் இணைக்கப்படும். பயனர் Grab தனத்துடன் எந்த நிதி வளங்களையும் சேர்க்கவில்லையென்றால், அவர் PayLater சேவையைப் பயன்படுத்த ஒரு நிதி வளத்தைச் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். இந்த நிதி வளம் GrabPay கிரெடிட்ஸ் வாங்குவதற்கும் அதன் வழி PayLater தவணை பில்களைச் செலுத்தவும், வாங்குதல் நடக்கும் நேரத்தில் முதலாம் பணம் செலுத்தலைச் செலுத்தவும் (பொருந்தினால்) மற்றும்/அல்லது செயல்முறைக் கட்டணம் உட்பட ஏதேனும் தொடர்புள்ள கட்டணங்களைச் செலுத்தவும் பயன்படும். இதில் GrabPay பயன்பாட்டு விதிகளில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் அமலாகும்.

3.2.3 பொருந்தினால், பயனர்கள் நிறுவனம் GrabPay தளத்தில் PayLater தவணை பில்களைச் செலுத்துவதற்கும், வாங்குதல் நேரத்தில் செலுத்த வேண்டிய முதலாம் தவணையைச் செலுத்தவும் (பொருந்தினால்) மற்றும்/அல்லது செயல்முறைக் கட்டணம் உட்பட ஏதேனும் தொடர்புள்ள கட்டணங்களைச் செலுத்தவும் கிடைக்கச் செய்துள்ள ஏதேனும் பிற பணம் செலுத்தும் முறைகளையும் தேர்ந்தெடுக்கலாம்.

3.2.4 PayLater போஸ்ட்பெய்டு தவிர பிற பணம் செலுத்தல் முறைகளைப் பயன்படுத்துவதற்காக மூன்றாம் தரப்பு அல்லது நிறுவனம் எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை. இது PayLater விதிமுறைகளில் பயனருடன் எழுத்துப்பூர்வமாக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

3.2.5 தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் சிறப்பம்சங்கள்:

(a) தானியங்கி-பிடித்தம்: இதன்படி, பயனர் GPNS-ஐ செயற்படுத்தி மூன்றாம் தரப்புக்கு அல்லது ஒதுக்கீட்டாளருக்கு மற்றும்/அல்லது அவர்களின் சார்பில் செயற்படும் (நிறுவனம் உட்பட) ஏதேனும் நபருக்கு PayLater தவணை பில்(களின்) கீழ் செலுத்த வேண்டிய தொகைகளை பயனரின் GrabPay கிரெடிட்ஸ்-இலிருந்து PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடுவிற்குள் மேற்கொண்டு பயனரிடமிருந்து ஒப்புதல் கேட்கப்படாமலே தானியங்கி பிடித்தம் செய்துகொள்ளப்பட ஒப்புக்கொள்கிறார். பயனர் தனது விருப்பத்திற்குரிய நிதி வளத்தைச் Grab தளத்தில் சேர்த்து அதை இயல்புநிலை பணம் செலுத்தும் முறையாக ஆக்கி GPNS அதிலிருந்து தானியங்கி, பணத்தைப் பிடித்துக்கொள்ள வகை செய்யலாம்.

(b) தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் சிறப்பம்சம்: PayLater தவணை பில்(களை) PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடுவிற்கு முன் செலுத்தப் போதுமான GrabPay கிரெடிட்ஸ் இல்லாமல் பற்றாக்குறையாக இருந்தால் பயனரின் விருபத்திற்குரிய நிதி வளத்திலிருந்து தானாகவே போதியளவு GrabPay கிரெடிட்ஸ்- ஐ. PayLater தவணை பில்(களை) மற்றும் அல்லது தொடர்புள்ள கட்டணங்களைச் செலுத்தும் ஒரே நோக்கத்திற்காக GPNS-ஐ செயற்படுத்த இங்கு பயனர் ஒப்புதல் வழங்குகிறார்.

3.2.6 சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டு, எந்தக் காரணத்திற்காவது GPNS, PayLater தவணை பில்களை PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடுவிற்கு முன் செலுத்துவதற்குப் போதுமான பணம் இல்லாமல் இருந்தால் ஷரத்து 3.2.5 (a)-இன்படி இந்தத் தானியங்கி பிடித்தம் செய்வதை மாற்ற முடியாதபடி செயற்படுத்தி தொடர்ந்து பிடித்தம் செய்யப்படும் அல்லது ஷரத்து 3.2.5 (b)-இன்படி தானியங்கி-பிடித்தம் அல்லது தானியங்கி-டாப் அப் செய்யப்பட்டு பயனரின் விருப்பத்திற்குரிய நிதி வளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் அல்லது அது தோல்வியடைந்தால் Grab தளத்திலுள்ள பயனரின் வேறு ஏதேனும் பிற நிதி வளத்திலிருந்து, முழுப் பணம் செலுத்தலும் பெறப்படும்.

3.2.7 பயனர் GrabPay வாலட் வழியாக ஒரு காலண்டர் ஆண்டின் மொத்த மதிப்பை அடைந்துவிட்டால், (GrabPay பயன்பாட்டு விதிமுறைகளில் விவரிக்கப்பட்டபடி) அல்லது GrabPay கிரெடிட்ஸ் வழியாக PayLater தவணை பில்(கள்) மற்றும்/அல்லது தொடர்புடைய கட்டணங்கள் பயனரை அம்மதிப்பை அடையச் செய்துவிட்டால், பயனர் GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள பிற இசைவு நிறுவனங்களை பயனரின் நிதி வளத்திலிருந்து நேரடியாகப் பணத்தைப் பிடித்தம் செய்து பயனரின் PayLater தவணை பில்(களை) மற்றும்/அல்லது எதேனும் தொடர்புடைய கட்டணங்களைச் செலுத்துவதற்காக ஒப்புக்கொண்டு அங்கீகரிக்கிறார்.

3.2.8 இந்த PayLater பயன்பாட்டு விதிகளில் குறிப்பிட்டவற்றை ஒப்புக்கொண்டபடி PayLater போஸ்ட்பெய்டு பில்(களுக்கு) PayLater தவணை காலக்கெடு தேதிக்குள் முழுப் பணம் செலுத்தலும் செய்யப்படாவிட்டால் (பயனரால் நேரடியாகவோ தானியங்கி டாப் அப் அல்லது தானியங்கி பிடித்தம் செய்யும் அம்சம் வழியாகவோ அல்லது மேற்கூறிய நேரடியான பிடித்தம் தோல்வியடைந்தாலோ) (மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளருக்கு), PayLater தவணை பணம்செலுத்தல் காலக்கெடுவிற்குள் அந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் அல்லது ஒதுக்கீட்டாளர் மற்றும்/அல்லது அவர்களின் சார்பில் செயற்படும் எந்த நபரும் (நிறுவனம் மற்றும்/அல்லது இசைவு பெற்ற நிறுவனங்கள் உட்பட)பயனர் பணம் செலுத்துமாறு தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்க, பயனரின் Grab தளத்திற்கான மற்றும்/அல்லது PayLater சேவைகள் ஆகியவற்றை அணுகுவதற்கான அணுக்கத்தை இடைநிறுத்தி வைத்தல் செய்யப்படும்.

3.2.9 இவ்வாறு இடைநிறுத்தல் செய்யப்படும் நிகழ்வில், பயனரின் அணுக்கத்தை மீண்டும் செயற்படுத்தவும், Grab தளத்திற்குள் மற்றும்/அல்லது PayLater சேவைகள் மற்றும்/அல்லது தவறவிட்ட ஒவ்வொரு PayLater தவணை பில்லுக்கும் இடைநிறுத்தம் செய்யப்பட்ட அணுக்கத்தை மீண்டும் செயற்படுத்தவும் SGD15 நிர்வாகக் கட்டணமாக பயனரிடமிருந்து வசூலிக்கப்படும் .

3.2.10 நிர்வாகக் கட்டணம் மற்றும் செயல்முறைக் கட்டணம்த்தைச் சேமிக்கவும் (பொருந்தினால்), PayLater தவணைக்கு வேறு எந்த வட்டி அல்லது கட்டணத்தையும் நாங்கள் வசூலிக்க மாட்டோம், மேலும் உங்களிடம் வசூலிக்கப்படும் நிர்வாகக் கட்டணம் அல்லது செயலாக்கக் கட்டணத்தை (பொருந்தினால்) நாங்கள் கூட்ட மாட்டோம்.

**3.3 PayLater** தவணை ரீ்ஃபண்ட் செயல்முறை

3.3.1 ஒரு பயனர் முழு அல்லது பகுதி ரீ்ஃபண்ட்-ஐ மூன்றாம் தரப்பு வழங்குநர் இடமிருந்து பெற்ற பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்காக PayLater சேவைகளின் வழியாக பெறவேண்டிய நிகழ்வில், ஆனால் நீங்கள் அந்தப் பொருட்கள் PayLater தவணை பில்லின் கீழ் வருகையில், நீங்கள் இவற்றுக்கு ஏற்புமையும் ஒப்புதலும் வழங்குகிறீர்கள்:

(a) அந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள இசைவு பெற்ற நிறுவனங்களுக்கு, அவை மூன்றாம் தரப்பு வழங்குநரின் பணம் விநியோகிக்கும் முகவராக, இது போன்ற உங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரீ்ஃபண்ட் தொகைகளுக்காகச் செயற்படுவார்கள்;

(b) கீழே ஷரத்து 3.3.2 இல் விவரிக்கப்பட்டதைத் தவிர்த்து GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ள இசைவு பெற்ற நிறுவனங்கள் இது போன்ற ரீ்ஃபண்ட் பெறப்படும் நிகழ்வில் உங்கள் சார்பாக PayLater தவணை பில்(களை) மற்றும்/அல்லது தொடர்புள்ள நிலுவையாக உள்ள கட்டணங்களுக்காக அல்லது PayLater தவணை சேவையைப் பயன்படுத்தி நடத்தப்படும் எதிர்காலப் பரிவர்த்தனைகளுக்காகச் செலுத்தப்படுவதும் நிகழும். PayLater தவணை பில்(களை) மற்றும்/அல்லது தொடர்புள்ள கட்டணங்களுக்காகச் செலுத்தப்படாத ஏதேனும் ரீ்ஃபண்ட் தொகைகள் GrabPay கிரெடிட்களாக மற்றும்/அல்லது உங்கள் நிதி வளங்களுக்கு ரீ்ஃபண்ட் செய்யப்படும். மேலும் ஷரத்து 3.2.7 இன்படி நேரடி பிடித்தம் நிகழ்ந்தால் அது முதலில் GrabPay கிரெடிட்ஸ் இல் சேர்ந்துள்ள அதுபோன்ற ரீ்ஃபண்ட் மீது செயற்படும்;மேலும்

(c) ஒரு பயனர் இந்த ஒப்பந்தத்தை ஷரத்து 10.1 இன்படி முடித்துக்கொண்டால், ஷரத்து 3.2.7 இன்படி நேரடி பிடித்தம் நிகழ்ந்தால், PayLater தவணை பில்(களுக்குச்) செலுத்தப்படாத ஏதேனும் ரீ்ஃபண்ட் உங்களுக்கு GrabPay கிரெடிட்ஸ் மற்றும்/அல்லது உங்கள் நிதி வளத்தில் ரீ்ஃபண்ட் செய்யப்படும்.

3.3.2 செயல்முறைக் கட்டணம் பொருந்துமெனில் பின்வருகின்றபடி ரீ்ஃபண்ட் தொகை செலுத்தப்படும்:

(a) ரீ்ஃபண்ட் தொகை அடுத்த PayLater தவணை பணம் செலுத்தல் காலக்கெடு(க்கள்)-க்கு முன்னர் வழங்கப்படுகின்றபொழுது, இது போன்ற ரீ்ஃபண்ட் தொகை அடுத்த செலுத்தப்படாத PayLater தவணை பில்(களுக்காகச்) செலுத்தப்படும். செலுத்தப்படாத PayLater தவணை பில்(களுக்கான செயற்படுத்தல் கட்டணமானது முறையே அதற்கான PayLater தவணை பில்(களுக்காக) விகிதாசார முறையில் கணக்கிடப்பட்டு ரீ்ஃபண்ட் தொகையில் சீரமைக்கப்படும்.

(b) உங்களிடம் செலுத்தப்பட வேண்டிய மற்றும்/அல்லது அதிகப்படியாக நிலுவையாக நிற்கின்ற PayLater தவணை பில்(கள்) உள்ளதென்றால், ரீ்ஃபண்ட் வழங்கப்படும்போது, அந்த ரீ்ஃபண்ட் இந்த முன்னுரிமைப்படி வழங்கப்படும். (i) முதலாவதாக, பொருந்தினால், அதிகப்படியாக நிலுவையாக நிற்கின்ற PayLater தவணை பில்(களுக்கான) நிர்வாகக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக; (ii) இரண்டாவதாக, செலுத்தப்பட வேண்டிய மற்றும்/அல்லது அதிகப்படியாக நிலுவையாக நிற்கின்ற PayLater தவணை பில்(களுக்கான) செயல்முறைக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக; மேலும் (iii) இறுதியாக மீதமிருக்கும் ரீ்ஃபண்ட் தொகை மீதமுள்ள செலுத்தப்படாத PayLater தவணை பில்(கள்) ஏதேனும் உள்ளதென்றால் அவற்றுக்காகச் செலுத்தப்படும் மேலும் மேற்கூறிய (a) பிரிவில் உள்ள வழிமுறைப்படி பின்பற்றப்படும்.

(c) இந்த ரீஃபண்ட் தொகை நீங்கள் PayLater தவணை பில்(களைச்)) செலுத்திய பின்னர் வழங்கப்பட்டால், அந்த ரீஃபண்ட் தொகை மேற்படி PayLater தவணை பில்(களுக்கான) அசல் மீது மட்டும் செலுத்தப்படும் (செயல்முறைக் கட்டணம் தவிர);

(d) நிலுவையிலுள்ள PayLater தவணை பில்(கள்) மற்றும் செயல்முறைக் கட்டணம் ஆகியவற்றுக்கு ரீஃபண்ட் செலுத்தப்பட்ட பின்னர் மீதமுள்ள தொகையை இந்த PayLater தவணை பில்(களு)க்காகவும் PayLater தவணை பணம் செலுத்தல் காலக் கெடுக்(களு)க்கான செயல்முறைக் கட்டணங்களுக்கு முறையே நீங்கள் செலுத்த வேண்டும்;

(e) ரீஃபண்ட் தொகை செலுத்தப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட செயல்முறைக் கட்டணம் பயனருக்கு திரும்ப வழங்கப்படாது; மேலும்

(f) PayLater தவணை பில்(களுக்குச்) செலுத்தப்படாத மீதமுள்ள ரீஃபண்ட் தொகை உங்களுக்கு GrabPay கிரெடிட்ஸ் ஆக மற்றும்/அல்லது உங்கள் நிதி வளத்திற்கு ரீஃபண்ட் செய்யப்படும். ஷரத்து 3.2.7 இன்படி நேரடி பிடித்தம் நிகழ்ந்தால், முறையாக அது முதலில் GrabPay கிரெடிட்ஸ்-இக்குச் செலுத்தப்படும்.

**4. <u>பிரதிநிதித்தல், வாரண்டிகள், பொறுப்பேற்றல்கள்</u>**

4.1 PayLater சேவைகளைப் பயன்படுத்துவதன் வழி, நீங்கள் வெளிப்படையாக இந்தப் பிரதிநிதித்தல், வாரண்டிகள், பொறுப்பேற்றல்கள் ஆகியவற்றை வழங்குகிறீர்கள்:

(a) இந்த PayLater விதிமுறைகளின்படி சட்டப்பூர்வத் தகுதியுடையவராகவும்,ஒப்பந்தத்தில் உள்நுழையத் திறன் பெற்றவராகவும் PayLater விதிமுறைகளை ஏற்கவும், ஒப்புக் கொள்வதற்கும், அவற்றுக்கு இணக்கமாக நடப்பதற்கும் தகுதி பெற்றிருக்கிறீர்கள்:

(b) நீங்கள் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை, துல்லியமானவை;

(c) PayLater சேவைகளை நீங்கள் சிங்கப்பூரிலோ அல்லது நீங்கள் இருக்கும் வேறு நாட்டிலோ, மாநிலத்திலோ, நகரத்திலோ பயன்படுத்தும்பொழுது அவற்றின் பொருந்தும் சட்டங்களுக்கு இணக்கமாக இருப்பீர்கள்;

(d) நீங்கள் PayLater சேவைகளை அங்கீகரிக்கப்பட்ட முறையிலேயே அணுகுவீர்கள். சரியான PayLater சேவைகளைப் பயனபடுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது உங்கள் பொறுப்பாகும்;

(e) PayLater சேவைகளைச் சட்டப்பூர்வமான நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்துவீர்கள்;

(f) PayLater சேவைகளை அவை உருவாக்கபட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்துவீர்கள் ;

(g) Grab தளம் அல்லது PayLater சேவைகளை சட்டவிரோதமான பொருட்களை அனுப்ப அல்லது சேமித்துவைக்க அல்லதுமோசடி செய்ய நீங்கள் பயன்படுத்தக் கூடாது:

(h) Grab தளம் அல்லது PayLater சேவைகளை, தொந்தரவு தருதல், வெறுப்பைத் தூண்டுதல் அல்லது அசௌகரியப்படுத்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தக் கூடாது;

(i) PayLater சேவைக்கு மற்றும்/அல்லது Platform தளத்திற்கு ஏந்த விதத்திலும் தீங்கு இழைக்கக் கூடாது;

(j) உங்கள் PayLater கணக்கில் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது பாதுகாப்பு மீறல் நடந்தால் அதை உடனடியாக நிறுவனத்திற்குத் தெரிவிக்க ஒப்புக்கொள்கிறீர்கள்;

(k) உங்கள் அடையாளத்தை நியாயமாகக் கோருகையில் அல்லது அது தேவைப்படுகையில் நிறுவனத்திற்கு அவற்றை நீங்கள் வழங்க வேண்டும்;

(l) PayLater சேவைகளுக்காக நீங்கள் துல்லியமான, நடப்பிலுள்ள, முழுமையான தகவலை வழங்க வேண்டும்; மேலும் இந்த ஒப்பந்தக்க

காலத்தின்போது எந்த நேரத்திலும் உங்கள் தகவலைத் துல்லியமாகவும் புதுப்பிக்கப்பட்டதாகாவும் பராமரிப்பதற்கு நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள்;நிறுவனம் உங்கள் தகவல்கள் துல்லியமானவை, நடப்பிலுள்ளவை மேலும் முழுமையானவை என நிறுவனம் நம்பிக்கை கொள்வதற்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். உங்கள் தகவல்கள் எந்த விதத்திலாவது துல்லியமற்றவை நடப்பில் இல்லாதவை மேலும் முழுமையற்றவை என்றால் மேலும் அவ்வாறு ஏற்புமை தெரிவித்தால், நிறுவனம் இந்த ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ளும் உரிமையையும் மேலும் நீங்கள் PayLater சேவையைப் பயன்படுத்துதலை அறிவிப்புக் கொடுத்து அல்லது கொடுக்காமல் முடித்துக் கொள்ளும் உரிமையைத் தக்கவைத்துக் கொள்கிறது,

(m) நிறுவனம் ஏதேனும் நிகழ்வு, சலுகை அல்லது விளம்பர உத்தி வழியாக புதிய சந்தாதாரர்களை வரவேற்றல் அல்லது PayLater சேவைகளுக்கு புதிய சந்தா அல்லது பயன்பாடு மூலம் புதிய அல்லது இருக்கும் வாடிக்கையாளர்களிடம் விளம்பரப்படுத்தல் ஆகியவற்றின் வழியாகச் செயல்படும்போது நிறுவனத்தை ஏமாற்றும் ஏதேனும் வழிகளில் அல்லது மோசடியான அல்லது ஏதேனும் நிகழ்வுகளின் வழி முறைகளில் உங்கள் சொந்த செழிப்பிற்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது

(n) PayLater சேவைகள் நியாயமான முயற்சிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள்;

(o) Grab தளத்திற்கு வரும் வேறெந்தப் பயனரின் அல்லது வருகையாளரின் அல்லது நிறுவனத்தின் பிற வாடிக்கையாளர்களின் எந்தத் தகவலையும் பின்னோக்கிப் பார்த்தல், தடமறிதல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது. அது உங்களுக்குச் சொந்தமல்லாத பிறரின் கணக்கு, அவற்றின் மூலங்கள், அல்லது Grab தளத்தைச் சுரண்டுதல், அதற்கான காரணம் Grab தளத்தில் சமர்ப்பிக்கப்படும் தகவலை அறிதல் வழியாக ஏதேனும் தகவலை வெளிப்படுத்தல் உட்பட, உங்களைத் தவிர Grab தளத்திற்கு வழங்கப்பட்ட பிற நபர்களின் தனிநபர்த் தகவலை அடையாளம் அறிதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது;

(p) PayLater சேவைகளை பயன்படுத்தி Grab இன் தகவல்கள் அல்லது Grab தளம் மற்றும்/அல்லது PayLater சேவைகளின் தகவல்களை “டேட்டா மைனிங்” போன்ற பிற நோக்கங்களுக்காகக் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது; விதி மீறல் என்பது கொடுங் குற்றமாகும் மேலும் அது தொழில் ஒற்றாடல் அல்லது சதி எனக் குற்றம் சாட்டப்படும் மேலும் சட்டம் அனுமதித்துள்ளபடி பொருந்தும் சட்ட நடவடிக்கைகள் உங்களுக்கு எதிராகவும் மற்றும்/அல்லது உங்களை இயக்கிய எந்த இயற்கையான அல்லது செயற்கை நபர் மீது PayLater சேவைகளை அதற்கான நோக்கங்களுக்காக அல்லாமல் வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய காரணத்திற்காக எடுக்கப்படும்:

(q) உங்கள் PayLater சேவைப் பயன்பாடு Grab இன் தனியுரிமை அறிவிப்பிற்கு உட்பட்டது; மேலும்

(r) உங்கள் ஒப்பந்த மீறலின் விளைவாக உங்கள் செயற்பாடு, நிறுவனம் அல்லது பிற நபர்களின் செயற்பாடு வழி இழந்த இழப்புகள் அல்லது சேதங்களுக்கு நீங்களே முழுப் பொறுப்பேற்கிறீர்கள்.

4.2 நீங்கள் மூன்றாம் தரப்பு வழங்குநர் என்றால் நீங்கள் கூடுதலாக இந்தப் பிரதிநிதித்தல், வாரண்ட், பொறுப்பேற்றலை வழங்குகிறீர்கள்:

(a) பொருந்துகிறபடி, PayLater சேவை வழியாக PayLater விதிமுறைகளின்படி நீங்கள் வழங்கும் சேவைகளுக்கு உரிய உரிமங்கள், ஒப்புதல்கள் மற்றும் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளைப் பயனருக்கு வழங்க அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்;

(b) பயனருக்கு நீங்கள் வழங்கிய பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளின் விளைவாக எழுந்த ஏதேனும் மற்றும் அனைத்து கோரல்கள், தீர்ப்புகள் மற்றும் பொறுப்பேற்றல்களுக்கு அல்லது விளைந்தது என குற்றம் சாட்டப்பட்டவற்றுக்கு நீங்களே முழுவதுமாகப் பொறுப்பேற்கிறீர்கள்;

(c) உங்கள் வர்த்தகம், மற்றும்/அல்லது பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள் ஆகியவற்றின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து சட்டங்களுக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் மேலும் அந்தச் சட்டங்களை மீறலுக்கும் நீங்களே முழுப் பொறுப்பேற்கிறீர்கள்;

(d) உங்கள் முதலாளியின் சார்பில் நீங்கள் ஒரு கணக்கைப் பதிய வேண்டுமென்றால், உங்கள் முதலாளி அக் கணக்கின் உரிமைஉயாளர் ஆவார், மேலும் நீங்கள் இந்த ஒப்பந்தத்திற்கு உங்கள் முதலாளியைப் பிணைக்க நீங்கள் பிரதிநிதிக்கவும் வாரண்ட் வழங்கவும் செய்கிறீர்கள்.

4.3 நீங்கள் பயனர் என்றால் நீங்கள் கூடுதலாக இந்தப் பிரதிநிதித்தல், வாரண்ட், பொறுப்பேற்றலை வழங்குகிறீர்கள்:

(a) நீங்கள் PayLater சேவைகளை உங்கள் சொந்த,தனிநபர் பயன்பாட்டுக்கு மட்டும் பயனபடுத்த வேண்டும்;

(b) உங்கள் அடையாளத்தை அல்லது பயனர் நிலைமையைப் பிறர் பயன்படுத்த அல்லது அனுமதிக்கக் கூடாது, மேலும் உங்கள் PayLater கணக்கு அல்லது PayLater போஸ்ட்பெய்டு பில்(கள்) அல்லது PayLater தவணை பில்(கள்) (பொருந்துபவை அனைத்தும்) எந்தப் பிற நபர் அல்லது சட்ட நபர்களுக்கு பரிமாற்றக் கூடாது ; and

(c) மூன்றாம் தரப்பு வழங்குநர் உங்களுக்கு வழங்கிய பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகலின் விளைவாக எழுந்த கோரல்கள், தீர்ப்புகள் மற்றும் பொறுப்பேற்றல்களுக்கு அல்லது விளைந்தது என குற்றம் சாட்டப்பட்டவற்றுக்கு மூன்றாம் தரப்பே முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்.

**5.** <u>வரிகள்</u>

5.1 இந்த ஒப்பந்தம் நடைமுறையிலிருக்கும் அனைத்து சட்டங்கள், வரிகள், கட்டணங்கள், கூடுதல் சார்ஜ்கள் மற்றும் அல்லது செலவுகளுக்கு உட்பட்டது, அவை எந்த அளவில் இருந்தாலும் எந்தக் கட்டத்திலும் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் எதிர்கால வரிகள் என்றாலும்கூட என நான் ஒப்புக்கொள்கிறேன். .

5.2 நிறுவனத்தைத் தற்காத்து நிற்கவேண்டி இந்த ஒப்பந்தத்தின் கீழ் PayLater சேவைகளுடன் தொடர்புடைய எந்த வரிகளுடனும் தொடர்புடைய கோரல் அல்லது இன்புட் வரி கிரெடிட், செட் ஆ்ப், ரிபேட் அல்லது ரீ்பண்ட் ஆகியவற்றுக்காக சட்டப்படி தேவையான அனைத்தையும் செய்ய சிறந்த முயற்சிகளை பயன்படுத்துவேன் என்றும் கூடுதலாக நான் ஒப்புக் கொள்கிறேன்.

**6.** <u>தரவுத் தனியுரிமையும் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கையும்</u>

6.1 நீங்கள் Grab-க்கு வழங்கும் அனைத்து தனிநபர் தரவுகளும் Grab தனியுரிமைக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சேகரிப்பு, பயன்பாடு, வெளிப்பாடு மற்றும்/அல்லது செயலாக்கம் செய்யப்படும். தனியுரிமைக் கொள்கை தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ அல்லது உங்கள் உரிமைகளைப் பயன்படுத்த விரும்பினாலோ, எங்கள் இணையதளத்தில் உள்ள தனியுரிமைக் கொள்கையில் வழங்கப்பட்ட ஆன்லைன் படிவத்தை பூர்த்தி செய்யவும்.

6.2 தனியுரிமை அறிவிப்பைப் பற்றிய சந்தேகங்களைத் தீர்க்கும் பொருட்டும், பொதுமைக்கு எந்தப் பாகுபாடும் நேரக்கூடாது என்பதற்காக, இந்த PayLater விதிமுறைகளின் கீழ் உங்கள் தனிநபர் தரவுகள் எங்கள் உரிமைகளையும் உங்கள் கடப்பாட்டையும் பூர்த்திசெய்யும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்:

(a) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள PayLater விதிமுறைகளின்படி செயல்முறை, உங்கள் செயலியை நிர்வகித்தல் அல்லது சரிபார்த்தல் மற்றும்/அல்லது எந்தப் பணம் செலுத்தலையும் செல்முறைப்படுத்தல் அல்லது சரிபார்த்தல், ரீ்பண்ட்கள், ரிபேட்கள் மற்றும்/அல்லது சார்ஜ்கள் உட்பட, உங்களுக்குச் சேவைகளை வழங்குவதற்காக;

(b) உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, PayLater விதிமுறைகளின் தொடர்ச்சியாக என்னவெல்லாம் உருவாக்கி, மேம்படுத்தி வழங்கப்பட வேண்டியுள்ளது எனச் செயற்படுத்துவதற்காக;

(c) Grab இன் கோரிக்கைக்கு ஏற்ப நீங்கள் இவற்றுக்குத் தகுதியானவரா என்று பார்க்க, அறிவார்ந்த பரிசோதனைகள், பணச் சலவைக்கு எதிர்ப்பு/பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டல் மதிப்பீடுகள், இடர் பகுப்பாய்வுகள், கிரெடிட் பீரோக்களுடன் அல்லது மாற்றாக கிரெடிட் மதிப்பெண் தரும் முகவர்கள் அல்லது பிற கிரெடிட் அறிக்கை நிறுவனங்கள் (CRO-கள்) தொடர்புகொண்டு கிரெடிட் மதிப்பீடு செய்தல், PayLater சேவைகளுக்காக அல்லது இது போன்ற நிதியியல் பொருட்களுக்காக பொருத்தப்பாடு மதிப்பீடு செய்வதற்காக;

(d) உங்களிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிக்கத் தேவைப்படும் செயற்பாடுகளைச் செய்தல் (மூன்றாம் தரப்பு கடன் வசூலிப்பவர்களுக்கு வெளிப்படுத்தல் உட்பட);

(e) Grab இன் கோரிக்கைக்கு ஏற்ப PayLater சேவைகளுக்காக அல்லது இது போன்ற நிதியியல் பொருட்களுக்காக நீங்கள் இவற்றுக்குத் தகுதியானவரா என்று பார்ப்பதற்காக; மேலும்

(f) பொருந்தும் சட்டங்கள் மற்றும் தனியுரிமை அறிவிப்பிற்கேற்ப தனிநபர் தரவுகளைப் பயன்படுத்தல், சேகரித்தல், வெளிப்படுத்தல், செயல்முறைப்படுத்தல் ஆகியவற்றை அனுமதிப்பதற்காக.

6.3 இந்நிறுவனம், Grab குழுமம் மற்றும் அதன் இணை நிறுவனங்களுடன் இணைந்து, உங்களைச் சார்ந்த தனிப்பட்ட தரவை, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காகவும், மற்றும் பிற வகையான செயலாக்கங்களுக்காகவும் சேகரிக்க, பயன்படுத்த, வெளிப்படுத்த அல்லது இந்த ஒப்பந்தத்திற்கு இணங்கவும் செயலாக்கப்படும். உதாரணத்திற்கு, காலந்தோறும் மேற்கொள்ளப்படும் தகுதிசார்ந்த ஆய்வுகள், பண மோசடி/பயங்கரவாத நிதிச் செயல்களைத் தடுக்கும் மதிப்பீடுகள், இடர் மதிப்பீடுகள், மோசடி தடுப்பு மற்றும் கண்டறிதல் நடவடிக்கைகள், Grab நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான தரவு பகுப்பாய்வு, கடன் முடிவுகளை உறுதி செய்தல், மற்றும் உங்களது PayLater பயன்பாடும், சேவைகளுக்கான தகுதி அல்லது பொருத்தத்தைக் கணிப்பது போன்றவை சட்ட அல்லது ஒழுங்குமுறைத் தேவைகளைப் பின்பற்றுவதற்காக.

6.4 PayLater சேவைகளைப் பயன்படுத்துவதில் உங்கள் நடத்தையை எங்கள் கூட்டாளராக இருக்கும் CRO களுடன் பகிர்ந்து, அவற்றை அவர்களின் சேவைக்குச் சந்தாதாரர்களாக இருப்பவர்களுடன் நிறுவனம் வெளிப்படுத்த நீங்கள் கூடுதலாக ஏற்புமை அளிக்கிறீர்கள்.

6.5 “தனிநபர் தரவுகள்” என்பதன் பொருள் என்னவென்றால், இவை உங்களை நேரடியாக அல்லது மறைமுகமாக, ஆனால் உங்கள் பெயர், அடையாள அட்டை எண், பிறப்புச் சான்றிதழ் எண், கடவுச்சீட்டு எண், குடியுரிமை, முகவரி, தொலைபேசி எண், கிரெடிட் அல்லது டெபிட் அட்டை எண், பேரினம், பாலினம், பிறந்த தேதி, மின்னஞ்சல் முகவரி, எந்த முறையிலாவது Grab-க்கு நீங்கள் வழங்கிய உங்களைப் பற்றிய தகவல்கள், மற்றும்/ அல்லது உங்களிடமிருந்து Grab-ஆல்சேகரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்ட தகவல்கள் அல்லது சேகரிக்கப் படலாமென்கிற தகவல்கள் ஆகும். .

## 7. <u>மூன்றாம் தரப்பு இடைவினைகள்</u>

7.1 PayLater சேவைகளைப் பயன்படுத்தும்போது, நீங்கள் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை வாங்குவதற்காக அல்லது மூன்றாம் தரப்பு வழங்குநர்களின் ஊக்குவித்தல்களில் பங்கேற்பீர்கள், விளம்பரதாரர்கள் அல்லது நிகழ்ச்சி ஆதரவாளர்கள் அவர்களின் பொருட்களை மற்றும்/அல்லது சேவைகளை PayLater வழியாக மற்றும்/அல்லது Grab தளம்வழியாக காட்சிப்படுத்தும்போது நீங்கள் அவர்களுடன் தொடர்பு கொள்கிறீர்கள்.

7.2 PayLater விதிமுறைகளில் விவரித்துள்ளதைத் தவிர, அல்லது PayLater சேவைகளைத் தொடரும் பொருட்டு ஏற்படுத்திய ஒப்பந்தங்கள், ஏதேனும் அது போன்ற செயல்கள், விதிமுறைகள், நிபந்தனைகள், வாரண்டிகள் அல்லது

பிரதிநிதித்தல்கள் ஆகிய இது போன்றவற்றுடன் தொடர்புடைய செயல் உங்களுடனும் பொருந்துகின்ற மூன்றாம் தரப்பு வழங்குநருடனும் மட்டும் தனியாக நடைபெறுவதாகும்.

7.3 PayLater விதிமுறைகளில் விவரித்துள்ளதைத் தவிர அல்லது PayLater சேவைகளை தொடரும் பொருட்டு, ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் வழியாக மேற்கொண்ட இதுபோன்ற உங்களுக்கும் மூன்றாம் தரப்பு வழங்குநருக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பு, வாங்குதல், பரிவர்த்தனை, அல்லது ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு நிறுவனம் மற்றும்/அல்லது அதன் இசைவு பெற்ற நிறுவனங்கள், அவர்களின் உரிமம் பெற்றவர்கள் ஆகியோருக்கு எந்தப் பொறுப்பேற்பும், கடப்பாடும், பொறுப்பும் கிடையாது.

7.4 நிறுவனம் PayLater விதிமுறைகளின்படியான PayLater சேவைகளைத் தொடரும் பொருட்டு சேவைகளை வழங்குகிறத. இருப்பினும் குறிப்பிட்ட மூன்றாம் தரப்பு வழங்குநர் கூடுதல் அல்லது வேறுபட்ட பயன்பாட்டு விதிமுறைகளின் ஒப்பந்தத்தை அவர்களின் பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை வழங்குவதற்காகக் கோரலாம். இந்த PayLater விதிமுறைகளில் விவரிக்கப்பட்டவை தவிர அல்லது PayLater சேவைகளைப் பெற மற்றொரு ஒப்பந்தம் உங்களுக்கும் அந்த மூன்றாம் திறப்பு வழங்குநருக்கும் இடையில் ஏற்பட்டிருந்தால், நிறுவனம் அந்த ஒப்பந்தத்தின் தரப்பு அல்ல மேலும் அனைத்துப் கடமை மற்றும்/அல்லது பொறுப்பேற்றலிருந்து பொறுப்புத் துறக்கிறது.

**8.** <u>பாதுகாப்பு</u>

PayLater சேவைகளைப் பயன்படுத்துவதன் வழியாக PayLater விதிமுறைகளை ஒப்புக்கொள்வதால் நீங்கள் நிறுவனத்தையும், அதன் உரிமம் பெற்றவர்கள் மற்றும் அதுபோன்ற ஒவ்வொரு தரப்பின் தாய் நிறுவனங்கள்ம, துணைநிறுவனங்கள், இசைவு பெற்ற நிறுவனங்கள், அதிகாரிகள், இயக்குநர்கள், உறுப்பினர்கள், ஊழியர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோரை எந்தக் கோரல்கள், செலவுகள், சேதாரங்கள், இழப்புகள், பொறுப்பேற்றல்கள் மற்றும் செலவினங்கள் (வழக்குரைஞர் கட்டணம் செலவுகள் மற்றும்/அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கை உட்பட) ஆகியவற்றுக்கு எதிராகப் பாதுகாப்பளித்து தற்காத்து இவற்றின் தொடர்பாக எழும் கோரல்களிலிருந்து விடுவிக்க ஒப்புக்கொள்கிறீர்கள்.

(a) PayLater சேவைகள் மற்றும்/அல்லது Grab தளத்தில் நீங்கள் மூன்றாம் தரப்பு வழங்குநருடனும் பிற மூன்றாம் தரப்பு வணிகர்கள், போக்குவரத்து வழங்குநர்கள், கூட்டாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும்/அல்லது நிதிஆதரவாளர்கள் ஆகியோருடன் கொண்டுள்ள தொடர்பு;

(b) PayLater விதிமுறைகளை மீறுவதாக உள்ள உங்கள் மீறல்கள் அல்லது பொருந்தும் சட்ட அல்லது ஒழுங்குமுறை மீறல்கள், அவை இங்கே குறிப்பிடப்பட்டிருந்தாலும் அல்லது குறிப்பிடப்படாவிட்டாலும்;

(c) வேறெந்த மூன்றாம் தரப்பின் எந்த உரிமைகளை மீறல்; மேலும்

(d) PayLater சேவைகளை மற்றும்/அல்லது Grab தளத்தை தவறாகப் பயன்படுத்தல்.

**9.** <u>வரம்புப் பொறுப்பேற்றல்</u>

9.1 நிறுவனம், PayLater சேவைகள் மற்றும்/அல்லது Grab தளத்தைப்பற்றி நம்பகத்தன்மை, காலம்தவறாமை, தரம், பொருத்தம், கிடைக்கும்தன்மை, துல்லியம் அல்லது முழுமைத்தன்மை ஆகியவற்றுக்கு எந்தப் பிரதிநிதித்தல், வாரண்டி அல்லது கியாரண்டியை வழங்கவில்லை.

9.2 நிறுவனம் இவற்றுக்கான எந்த பிரதிநிதித்தல் அல்லது வாரண்டி தரவில்லை:

(a) PayLater சேவைகள் மற்றும்/அல்லது Grab தளத்தைப் பயன்படுத்தலில் பாதுகாப்பு, காலம்தவறாமை, தடையற்ற அல்லது பிழையற்ற செயற்பாடு ஆகியவற்றை வேறு எந்த வன்பொருள் மென்பொருள் கூட்டிணைவு, அமைப்பு அல்லது தரவுடனும் ;

(b) PayLater சேவை உங்கள் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் என்ற கூற்று ;

(c) சேமிக்கப்பட்டுள்ள எந்தத் தரவும் துல்லியமானது அல்லது நம்பகமானது;

(d) பொருட்கள், சேவைகள், தகவல்கள், வெகுமதிகள் அல்லது PayLater சேவைகள் வழியாக வாங்கிய அல்லது பெற்ற பொருட்களின் தரம் உங்கள் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் என்ற கூற்று;

(e) PayLater சேவைகளில் உள்ள பிழைகள் அல்லது குறைகள் சரிசெய்யப்படும் என்ற கூற்று.

9.3 PayLater சேவைகள் உங்களுக்கு 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

9.4 அனைத்து நிபந்தனைகள், பிரதிநிதித்தல்கள் வாரண்டிகள் ஆகியவை வெளிப்படையாக,மறைமுகமாக, சட்டப்பூர்வமாக அல்லது பிற வகையில் வரம்பின்றி இருத்தல் உட்பட, வாங்கிய வணிகப்பொருளுக்கான எந்தக் கருதிக்கொண்ட வாரண்டி, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கான பொருத்தப்பாடு, அல்லது மூன்றாம் தரப்பு உரிமைகளை மீறாமல் இருத்தல் ஆகியவை இங்கே சிங்கப்பூர் சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவிற்குப் புறம் தள்ளப்பட்டுள்ளன மேலும் பொறுப்புத் துறக்கப்பட்டுள்ளன.

9.5 PayLater சேவைகள் மற்றும்/அல்லது Grab தளம் வரம்பு, தாமதம் மற்றும் இணையத்தள மற்றும் மின்னணுவியல் தகவல்பரிமாற்றப் பயன்பாட்டில் தன்னகத்தே உள்ள பிரச்சினைகள் - நீங்கள் பயன்படுத்தும் சாதனம் அல்லது பிற பயனர்கள் பயன்படுத்துபவை பழுதாக உள்ள வாய்ப்பு, இணைப்பு இல்லாமை, மொபைல் சமிக்கை வீச்சுக்கு அப்பால் இருக்கும் நிலைமை அல்லது தவறான செயற்பாடு ஆகியவற்றுக்கு உட்பட்டது. நிறுவனம் எந்தத் தாமதம், விநியோகித்தலில் தோல்விகள்,சேதங்கள் அல்லது இது போன்ற பிரச்சினைகளால் ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றுக்கு பொறுப்பேற்பதில்லை.

9.6 சட்டம் அனுமதித்துள்ள உயர்ந்தபட்ச எல்லைவரை, PayLater சேவைகள் மற்றும்/அல்லது Grab தளத்தைப் பயன்படுத்தி எழுந்த எந்தக் கோரல், இழப்பு, சேதம், தரவு இழப்பு, செலவுகள் அல்லது ஏற்பட்ட செலவினங்கள் ஆகிய நீங்கள் (நேரடியாக அல்லது அதன் தொடர்ச்சியாக) துயரடைந்த அல்லது தாங்கிக்கொண்டவற்றுக்கு நிறுவனம் பொறுப்பேற்காது

**10.** <u>முடித்துக்கொள்ளுதல்</u>

10.1 ஷரத்து 10.5, 10.6 மற்றும் 10.7ஆகியவற்றுக்கு உட்பட்டு, நிறுவனமோ அல்லது நீங்களோ இந்த ஒப்பந்தத்தை ஒரு மாத கால அறிவிப்பு அவகாசத்தை எழுத்துப்பூர்வமாகக் கொடுத்து, அந்த ஒரு மாத அறிவுப்புக் காலத்தின் முடிவில் மேற்கொண்டு PayLate சேவைகளைப் பயன்படுத்துவதை முடக்கலாம்.

10.2 நீங்கள் இந்த நிலையில் இருக்கும் நிகழ்வில், இந்த ஒப்பந்தம் உடனடியாக முடிவடைந்துவிடும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்:

(a) நீங்கள் பாப்பர் அல்லது திவாலானால் அல்லது லிக்விடேஷன் அல்லது இதுபோன்ற பிற திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டால் அல்லது நிர்வகிக்கப்பட்டால்;

(b) சிங்கப்பூரில் உரிமம் பெற்ற வங்கியினால் கடனை அடைக்க முடியாதவர் (டிபால்ட்டர்) என்ற அறிக்கையிடப்பட்டால்; அல்லது

(c) மரணமடைந்தால்.

10.3 மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும் ஒரு நிகழ்வில், நிறுவனம் சிங்கப்பூர் வங்கியின் டிரஸ்டி, எக்சிகியூட்டிவ் அல்லது பிரதிநிதியைக் கையாளவும், PayLater போஸ்ட்பெய்டு பில்(கள்) அல்லது PayLater தவணை பில்(கள்) (பொருந்துவதை) நிலுவையாக இருக்கும் நிலையை பொருத்தமான முறையில் தீர்க்கவும் எதேச்சையான முடிவின்படியும் நடவடிக்கை எடுக்கும் உரிமையைத் தக்கவைத்துக் கொள்கிறது.

10.4 இந்த ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ள எந்த விதிமுறையையாவது நீங்கள் மீறியுள்ளது கண்டறியப்பட்டால் உடனடியாக ஒப்பந்தத்தை முடித்துக்

கொள்ளும் உரிமையை நிறுவனம் பெற்றுள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

10.5 ஒரு பயனராக நீங்கள் PayLater சேவைகளைப் பயன்படுத்துவதை நிறுவனம் முடக்குகிற வேளையில், நிறுவனத்திற்கு, ஒரு மூன்றாம் தரப்பு வழங்குநருக்கு மற்றும்/அல்லது ஒதுக்கீட்டாளருக்கு நீங்கள் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகை நிலுவையில் இருந்தால் இந்த ஒப்பந்தத்தை நீங்கள் முடித்துக்கொள்ள இயலாது. என்பதற்கு ஏற்புமையும் ஒப்புதலும் அளிக்கிறீர்கள்.

10.6 ஒரு பயனராக நீங்கள் கூடுதலாக ஏற்புமையும் ஒப்புதலும் இந்த விடயத்திற்காக அளிக்கிறீர்கள். அதாவது உங்கள் நிலுவையிலுள்ள PayLater போஸ்ட்பெய்டு பில்(கள்) PayLater தவணை பில்(கள்) ஆகியவற்றுக்காக உங்கள் GrabPay வாலட் இலிருந்து பிடித்தம் செய்துகொள்ளும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துக் கொள்கிறது அல்லது இதே போன்று நிறுவனத்திற்கு, ஒரு மூன்றாம் தரப்பு வழங்குநருக்கு மற்றும்/அல்லது ஒதுக்கீட்டாளருக்கு நிலுவையிலுள்ள தொகையை செலுத்தப்படுவதில் உங்கள் திவால் நிலைமை, சித்தப்பிரமை அல்லது மரணம் பாதிப்பதில்லை என்பதற்கும் கூடுதலாக ஏற்புமையும் ஒப்புதலும் அளிக்கிறீர்கள்.

10.7 நீங்கள் ஒரு மூன்றாம் தரப்பு வழங்குநராக, நிறுவனம் உங்கள் PayLater சேவைகளைப் பயன்படுத்துவதை மேற்கொண்டு முடக்கலாம் என்றும் ஒரு பயனருக்கு, ஒதுக்கீட்டாளருக்கு, GPNS மற்றும்/அல்லது நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள பிற இசைவு பெற்ற நிறுவனங்கள் அவை ஒதுக்கீட்டாளரின் வசூலிப்பு முகவராக செயற்படும்போது இந்த ஒப்பந்தத்தை நீங்கள் முடித்துக்கொள்ள முடியாது.

**11.** <u>சேவையைப் பயன்படுத்துவதில் எழுகின்ற புகார்கள்</u>

11.1 PayLater சேவையைப்களைப் பயன்படுத்துவதில் எழுகின்ற புகார்களை முதல் முறையிலேயே புகார் அளிக்க விரும்பினால், அதைப் பின்வரும் வாடிக்கையாளர் சேவை லைன் தொலைபேசி எண்: +65 6655 0005 அல்லது உதவி நிலையத்தை இந்தத் தளத்தின் முகவரி வழியாக அணுகவும் : http://help.grab.com

11.2 தவறான PayLater சேவைகள் குறித்து பணம் செலுத்தல் பரிவர்த்தனை நடந்த ஒரு மாதத்திற்குள் அல்லது PayLater போஸ்ட்பெய்டு பில்(கள்) அல்லது PayLater தவணை பில்(களுக்குப்) (பொருந்துகிறபடி) பணம் செலுத்தப்பட்ட ஏழு நாட்களுக்குள் புகாரை எழுப்ப நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்.

**12.** <u>அறிவிப்புகள்</u>

12.1 நிறுவனம் தனது அறிவிப்புகளை பொது அறிவிப்புகளாக Grab தளத்தில் கொடுக்கலாம், அல்லது Grab இல் பதிவுபெற்றுள்ள உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலாக அனுப்பலாம், அல்லது எழுத்துப்பூர்வ தகவல் தொடர்பாக Grab இல் பதிவுபெற்றுள்ள உங்கள் முகவரிக்கு பதிவு அஞ்சலாக அல்லது பிரிபெய்டு அஞ்சலாக அனுப்பலாம். அந்த அஞ்சல்கள் அனுப்பப்பட்டு (பதிவு அஞ்சல் அல்லது பிரிபெய்டு அஞ்சலாக அனுப்பட்டிருந்தால்) 48 மணிநேரம் கடந்த பின்னர் அல்லது 1 மணிநேரம் கடந்த பின்னர் (மின்னஞ்சலாக அனுப்பப்பட்டிருந்தால்) அனுப்பப்பட்டதாகக் கருதப்படும்.

12.2 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பு விவரங்களைப் பயன்படுத்தி தூதஞ்சல் அல்லது பதிவு அஞ்சல் வழியாக நீங்கள் நிறுவனத்திற்கு அறிவிப்பு (அவ்வாறு கொடுக்கப்படும் அறிவிப்பை நிறுவனம் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்) கொடுக்கலாம்.

**13.** <u>ஒதுக்கீடு</u>

13.1 இந்த ஒப்பந்தம் அவ்வப்போது திருத்தப்பட்டதாக PayLater விதிமுறைகளால் கட்டமைக்கப்பட்டு முன்னதாக நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமலே உங்களால் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கலாம் ஆனால் உங்கள் ஒப்புதல் இல்லாமலே நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக இருக்கும்.

13.2 இந்தப் பிரிவை மீறி நீங்கள் செய்யும் ஒதுக்கீடு செல்லாததாக ஆகிவிடும்.

**14.** <u>பொதுவானவை</u>

14.1 PayLater விதிமுறைகள் அல்லது PayLater சேவைகள் தொடர்பான எந்த சட்டப்படியான தேர்வு அல்லது சட்டப் பிரிவுகளின் முரண், நீதி பரிபாலன எல்லை, என்ன ஆட்சேபங்கள், சட்டச் செயற்பாடுகள், கோரல்கள் அல்லது நிவாரணங்கள் என்ற பேதமின்றி அவை எங்கே நடந்தாலும் சிங்கப்பூர் சர்வதேச ஆர்பிட்ரேஷன் நிலையத்திற்கு ("SIAC") ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டும். இது SIACஇன் அவ்வப்போது திருத்தப்பட்ட நிலையிலான விதிமுறைகளின்படி ("விதிகள்")இருக்கக் வேண்டும். இது இரு தரப்பும் ஒப்புக்கொண்டு SIAC-இன் தலைவரால் நியமிக்கப்பட்ட ஒற்றை ஆர்பிட்ரேட்டரால் ("ஆர்பிட்ரேட்டர்") விதியாகளின்படி தீர்ப்பளிக்கப்படும். ஆர்பிட்ரேட்டரின் இருப்பிடமும் அலுவலகமும் சிங்கப்பூரில் இருக்கும். இதன் நடைமுறை ஆங்கில மொழியில் இருக்கும். இதற்கான கட்டணத்தை ஆர்பிட்ரேட்டர் தீர்மானிக்கின்றபடி ஆர்பிட்ரேட்டர் வழிகாட்டுகின்றபடி இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு இந்த ஆர்பிட்ரேஷன் ஷரத்து பூர்த்திசெய்யப்படுவது பொருந்தும் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தத் தக்கதாக இருக்கும்.

14.2 GPNS மற்றும்/அல்லது நிறுவனத்தின் இசைவுபெற்ற நிறுவனங்கள் வசூலிப்பு முகவர் அல்லது விநியோகிக்கும் முகவராக ஒப்புக்கொள்ளபட்டவர் PayLater விதிமுறையால் அளிக்கப்பட்ட எந்த உரிமை, நன்மை அல்லது அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை சட்டப்படி நிலைநாட்டவும் அதைச் சார்ந்து நிற்கவும் இயலும்.

14.3 இந்த ஒப்பந்தத்ததின் கீழ் நிறுவனத்திற்கு கிடைத்துள்ள பிற உரிமைகளுக்குப் பாரபட்சமின்றி, நிறுவனம் எந்த நேரத்திலும், முன்னதாக அறிவிப்பு வழங்கி, உங்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையை நிறுவனத்திற்கு அல்லது அதன் இசைவு பெற்ற நிறுவனங்களுக்கு அல்லது நிறுவனத்திலிருந்து அல்லது அதன் இசைவு பெற்ற நிறுவனங்களிலிருந்து உங்களுக்கு செட் ஆ்ஃப் செய்யலாம்.

14.4 PayLater விதிமுறைகள் அல்லது PayLaterசேவைகளை பயன்படுத்துவதன் விளைவாக உங்களுக்கும் நிறுவனத்திற்கும் அல்லது எந்த மூன்றாம் தரப்பு வழங்குநர் இடையில் எந்தக் கூட்டு வர்த்தகம், கூட்டணி, வேலைவாய்ப்பு அல்லது முகவர் உறவு என்பவை கிடையாது.

14.5 PayLater விதிமுறைகள் இன் எந்தப் பகுதியாவது சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்த முடியாததாக தீர்ப்பளிக்கப்பட்டால், அந்தப் பகுதி நீக்கப்பட்டு மீதமுள்ள பகுதி சட்டத்தின் கீழ் முழுமையாக அமல்படுத்தப்படும். இது எந்த வரம்பும் இல்லாமல் மேற்கூறிய பொருந்தும் சட்டங்களுக்கும் நீதிபரிபாலன எல்லைகளுக்கும் பொருந்தும்.

14.6 நிறுவனம் எழுத்துப்பூர்வமாக தெரிவித்து ஏற்புமையும் ஒப்புதலும் அளிக்காத வரையில், PayLater விதிமுறைகளிலுள்ள எந்த உரிமையையாவது நிறுவனம் நிலைநாட்டத் தவறினால் அது அந்த உரிமை அல்லது பகுதியைக் கைவிட்டதாகக் கொள்ளப்படாது.

14.7 PayLater விதிமுறையின் அசல் வடிவம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆங்கில மூலத்திற்கும் பிற மொழிப் பதிப்புகளுக்கும் இடையில் முரண் தோன்றும் நிகழ்வில் ஆங்கிலப் பதிப்பே மேலோங்கும்.